வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P.1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 17.07.2025 வியாழக்கிழமை இதழ் : 198 பக்கங்கள் : 12




## உதவி தேவைப்படும் நேரங்களில் சீனா இலங்கைக்கு சகோதரனாக செயல்படும்

### சீனத் தூதுவர் கீ சென்ஹொங்



கொழும்பு, ஜூலை 17

**“இலங்கைக்கு உதவி தேவைப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் சீனா உங்களின் நம்பிக்கைக்குரிய சகோதரனாகவும் உதவியாளனாகவும் செயல்படும்.”, என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.**

சீன அரசாங்கத்தின் அன்பளிப்பில் சகல பாடசாலைகளுக்குமாக சுமார் 517 கோடி ரூபாய் பெறுமதியான பாடசாலை சீருடை துணிகளை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. கல்வி அமைச்சில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கருத்து வெளியிட்டபோதே சீன தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கையின் குழந்தைகள் இந்த நாட்டின் எதிர்காலம் மட்டுமல்ல சீன - இலங்கை நட்பின் வாரிசுகளும் ஆவர். அவர்களின் சீருடையிலுள்ள ஒவ்வொரு தையலிலும், பழமையான நமது இரு நாட்டு நாகரிகங்களுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பின் கதையும் பின்னிப்பிணைந்திருக்கும். பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அளிக்கும் பங்களிப்பையும் மேற்கொள்ளும் அர்ப்பணிப்பையும் நான் மிகவும் பாராட்டுகிறேன் - என்றும் அவர் இதன் போது கூறினார்.

இந்த நிகழ்வில் கல்வி, உயர்கல்வி, தொழில்நுட்பக் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமர சூரியவும் பங்கேற்றிருந்தார். (ஐ)



## கறுப்பு ஜூலை நினைவேந்தல் 24, 25ஆம் திகதிகளில் நல்லூரில்

யாழ்ப்பாணம், ஜூலை 17

கறுப்பு ஜூலை பொது நினைவேந்தலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட்டமும் எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் (கிட்டு பூங்கா) நடைபெறவுள்ளது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டம் குறித்து அந்த அமைப்பின் தலைவர் மு.கோமகன்

11

## அரசின் விசாரணைகளை எதிர்கொள்வதற்கு தயார்!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஜூலை 17

நாட்டுக்கான அபிவிருத்தி பணிகளை செய்ததையும் குற்றமாகக் கருதும் தரப்பினர் இந்த நாட்டில் உள்ளார்கள். அரசாங்கத்திலும் உள்ளார்கள். சட்டத்தின் பிரகாரமே வீடமைப்பு அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டேன். அரசாங்கம் முன்னெடுக்கும் விசாரணைகளை எதிர்கொள்வதற்கு நான் தயார் என்று, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

11

## நடந்து முடிந்ததே வரலாறு; தணிக்கைக்கு இடமில்லை

### முன்னாள் போராளி பசீர் காக்கா

யாழ்ப்பாணம், ஜூலை 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், அவரின் மகள் துவாரகா ஆகியோர் இறுதிப் போரில் வீரமரணம் அடைந்து விட்டனர். ஏற்கனவே நடந்து முடிந்ததே வரலாறு. இதில் தணிக்கைக்கோ சமரசத்துக்கோ இடமில்லை - இவ்வாறு பசீர் காக்கா என்று அறியப்பட்ட மு. மனோகர் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினராக பங்காற்றியிருந்த அவர், நேற்று விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு

11

## சபை அமர்வை முகநூலில் ஒளிபரப்பிய உறுப்பினர்!

### எச்சரித்த யாழ். மாநகர முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். மாநகர சபை அமர்வை முகநூல் ஊடாக நேரலையில் ஒளிபரப்பிய உறுப்பினர் ஒருவருக்கு மாநகர முதல்வரால் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில்

11

## மூதூர் படுகொலை நினைவேந்தப்பட்டது

திருகோணமலை, ஜூலை 17

மூதூர் பெரியவெளி பாடசாலையில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் சுட்டும் - எரித்தும் - வெட்டியும் படுகொலை செய்யப்பட்ட 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளைப் புதைத்த இடத்தில் கூடிய உறவினர்கள் மலர் தூவி, நினைவுச்சுடர் ஏற்றி, கண்ணீர் சிந்தி

11

## சூரிய சக்திக்காக பிராந்திய ஒத்துழைப்பு வலுவாக்கப்படும்

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 17

“சூரியசக்தியை பயன்படுத்தும் எதிர்காலத்துக்காக பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் செயல்படும்”, என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

11

## நாய்களுக்கு காப்பகம்

### சாவகச்சேரி நகர சபை ஏகமனதாக தீர்மானம்

தென்மராட்சி, ஜூலை 17

சாவகச்சேரி நகரில் கட்டாக்காலி நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்தவும் விபத்துகளை தவிர்க்கவும் நாய்களை பிடித்து அவற்றை பராமரிப்பதற்கு காப்பகம் ஒன்றை அமைக்க சாவகச்சேரி நகர சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபையின் நேற்றைய மாதாந்த அமர்விலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபையின் உபதவிசாளர் ஞா. கிஷோர், நாய்கள் காப்பகம் அமைப்பதற்கான பிரேரணையை முன் வைத்திருந்தார். இந்தப் பிரேரணையை

11

## வாகனம் கோரி நூதன போராட்டம்: கழிவகற்றும் உழவியந்திரத்தில் கூட்டத்துக்கு வந்த தவிசாளர்கள்



மட்டக்களப்பு, ஜூலை 17

மக்கள் பணியாற்றவும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பங்கேற்கவும் வருவதற்கு வாகனம் இல்லை. எனவே, வாகனம் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி, இரு பிரதேச சபைகளின் தவிசாளர்கள் கழிவகற்றும் உழவியந்திரத்தில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு சென்று,

11

## ஐ. நா. அறிக்கையாளருக்கு தடை; இலங்கையும் கவலை தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

இஸ்ரேலால் ஆக்கிர. மிக்கப்பட்ட பலஸ்தீன பகுதிக்கு ஐ. நா. விசேட அறிக்கையாளர் பிரான் செஸ்கா அல்பெனிஸூக்கு அமெரிக்கா தடை விதித்தமைக்கு இலங்கையும் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை உட்பட சில நாடுகள் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்குக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன.

அந்தக் கடிதத்தில், “ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய தலைவர் ஐ. நா. அறிக்கையாளருக்கு எதிராக விதிக்கப்பட்ட தடை குறித்து வெளியிட்டுள்ள கவலையை நாங்கள் எதிரொலிக்கிறோம்.” என்று இலங்கை, சீனா, தென்னாபிரிக்கா, கியூபா, ஸ்பெயின், பொலிவியா, பிரேசில், சிலி,

11

## ரயில் மோதி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

மூடியிருந்த ரயில் கடவையை சைக்கிளில் கடக்க முயன்றவர் ரயில் மோதி உயிரிழந்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்துக்கு அண்மையாக இடம்பெற்ற இந்த விபத்தில் திருநெல்வேலியை கிழக்கைச் சேர்ந்த சுந்தரக் குருக்கள்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் திண்ம கழிவு முகாமைத்துவம் மிக அவசியம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பாடசாலைகளில் திண்மக் கழிவு முகாமைத்துவம் அவசியம் எனவும் மாணவர்களுக்கு அதனை முறையாக பழக்கப் படுத்தவேண்டும் என யாழ். மாவட்ட செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் பாடசாலைப் பிரிவுப் போட்டிக்கான விண்ணப்பம் மற்றும் அளவுகோல்களைத் தெளிவுபடுத்தும் செயலமர்வு யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் தலைமையுரை யாற்றும் போதே மாவட்ட செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உற்பத்தித்திறன் சார்ந்த போட்டி மற்றும் செயற்பாடுகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது. பாடசாலைகளில் உற்பத்தித் திறன் செயற்பாட்டின் மூலம் அடைவு மட்டங்களை அறிந்துகொள்வதுடன், முன்னேற்றமான பாதையில் செல்ல முடியும்.

அத்துடன், பாடசாலைகளின் கட்டமைப்பில் முன்னரை விட மாற்றம் ஏற்பட்டுள்ளது. உற்பத்தித் திறன் செயற்பாட்டுக்கு தலைமைத்துவத்தின் பங்கும் அனைவரும் ஒன்றிணைந்த அர்ப்பணிப்பும் அவசியம். பாடசாலைகளில் அவர் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட கடமைக்கூறுகளை நேர்த்தியாக செய்வதன் ஊடாக இலக்குகளை அடைய முடியும்.

சில பாடசாலைகளில் மாணவர்கள் விவரங்கள் கணினி மயப்படுத்தியதன் மூலம் விவரங்களை இலகுபடுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் நேரசூசி கூட கணினி மயப் படுத்தி நிர்வாக நடைமுறைகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் பாடசாலைகளில் திண்மக் கழிவு முகாமைத்துவம் அவசியம். மாணவர்களுக்கு அதனை முறையாக பழக்கப் படுத்த வேண்டும்.

அதன் ஊடாக பாடசாலைகளில் ரம்மியமான - இயற்கையான சூழல் இருத்தல் வேண்டும் என்பதுடன் வகுப்பறைகள், அலுவலகங்களின் சூழலும் மற்றும் வெளிச்சூழலும் அழகாக இருத்தல் வேண்டும். இதனால் மாணவர்களின் அகச் சூழலில் நல்ல முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்படும் - என்றார். (அ)

# வடக்கு மாகாணத்துக்கு 5 செயலர்கள் நியமனம்



யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் வடக்கு மாகாணத்தின் 5 செயலாளர்கள், மாநகர சபை ஆணையாளர் மற்றும் பதில் ஆணையாளர் ஆகியோருக்கான நியமனங்கள் ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச செயலராகக் கடமையாற்றிய எஸ்.சத்தியசீலன் வடக்கு மாகாண சபைக்கு புதிதாக உள்வாங்கப்பட்டிருந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக கடமையாற்றிய மு.நந்தகோபாலன், மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளராகவும், கோப்பாய் பிரதேச செயலராகக் கடமையாற்றிய ச.சிவஸ்ரீ வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் பதில் செயலாளராகக் கடமையாற்றிய அ.சோதிநாதன் அதே அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதே நேரம், மாகாண காணி பதில் ஆணையாளராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவி வெற்றிடமாக இருந்த நிலையில், வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய ஆ.சிறீ நியமிக்கப்பட்டுள்ளார். மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய பொ. வாகீசன், வவுனியா மாநகர சபையின் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசனும் கலந்துகொண்டார்.

# வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்தும் செயற்பாட்டுக்கு ஆளணி பற்றாக்குறை

## தன்னார்வ உதவியாளர்கள் உதவ கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்தும் செயற்பாட்டுக்கு ஆளணி பற்றாக்குறை காணப்படுவதாகவும் தன்னார்வமாக உதவி செய்ய விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இருவார கால தீவிர தேசிய களச் செயற்பாடு - 2025 என்னும் தொனிப்பொருளில் வெள்ளை ஈ யைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்றிட்டம் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பமானது.

குறித்த செயற்திட்டத்துக்காக கொழும்பில் இருந்து 150 இயந்திரங்கள், 150 பணியாளர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர். ஆனாலும் ஓர் இயந்திரத்தை இயக்குவதற்கு ஆகக் குறைந்தது 4 பேர் தேவை.

எனவே ஆளணிப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் தன்னார்வமாக உதவி செய்ய விரும்புவர்கள் எதிர் பார்க்கப்பட்டுள்ளனர்.

செயற்றிட்டத்துக்கு தன்னார்வமாக உதவி செய்ய விரும்புவர்கள் தென்னை பயிர்ச்செய்கை சபையின் உதவிப் பொது முகாமையாளர் ரி. வைகுந்தனை 076-69 04 580 எனும் தொலைபேசி இயக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

இன்று மற்றும் நாளை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும், 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் உடுவில் பிரதேச செயலர் பிரிவிலும் 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலும் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிலும் இச்செயற் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

# காணாமல் ஆக்கப்பட்ட சகலருக்கும் நீதி கோரி மன்னாரில் கையொப்பம்!

மன்னார், ஜூலை 17

'சம உரிமைகளை வெல்வோம் இனவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவோம்' எனும் தொனிப்பொருளில் சம உரிமை இயக்கம் ஏற்பாடு செய்த எதிர்ப்பு பதாகையில் கையொப்பமிடும் நிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு, இன்னொரு அடக்கு முறைச் சட்டங்கள் வேண்டாம், பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக ரத்து செய், அனைத்து தேசிய இனங்களுக்கு சம உரிமைகளை உறுதி செய்யும் அரசியல் அமைப்பிற்காக போராடுவோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து எதிர்ப்புப் பதாகையில் கையொப்பம் சேகரிக்கப்பட்டது.

இதன்போது பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்து கையொப்பத்தை பதிவு செய்தனர். (அ)

# கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பிரதேச அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் ஆராய்வு

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சி - கரைச்சி பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் மற்றும் பிரதேசத்தில் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆரயப்பட்டன.

கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இ.சந்திரசேகரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன், துறைசார் திணைக்களங்களின் திணைக்கள தலைவர்கள், பொலிஸ் உயரதிகாரிகள், கடற்படை, கிராம சேவையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி சங்கலியை பறித்த இருவர் சிக்கினர்

முல்லைத்தீவு, ஜூலை 17

முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியில், மோட்டார் சைக்கிளில் வீதியால் சென்ற பெண்ணை வழிமறித்து கத்தியை கழுத்தில் வைத்து மிரட்டி சங்கலியை பறித்துச் சென்ற இருவர், கிராம மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு முள்ளியவளை பொன்னகர் கிராமத்தில் உள்ள வளர்மதி மைதானத் துக்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தர்மபுரம், விசுவமடு பகுதிகளைச் சேர்ந்த 32 மற்றும் 22 வயதானவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# கனடா அனுப்புவதாக தெரிவித்து பணம் வாங்கி ஏமாற்றிய முகவர்!

## யாழில் குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

கனடா நாட்டுக்கு செல்வதற்காக முகவர் ஒருவரிடம் பெரும் தொகை பணத்தைக் கொடுத்து ஏமாந்த குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த செல்வராசா பாஸ்கரன் (வயது 34) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கனடா செல்வதற்காக கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் முகவர் ஒருவரிடம் 80 இலட்ச ரூபாய் பணத்தை வழங்கியுள்ளார்.

இரண்டு வருட காலமாக கனடா அனுப்பாது முகவர் ஏமாற்றி வந்த நிலையில், பணத்தை மீள தருமாறு முகவருடன் தர்க்கப் பட்டு வந்துள்ளார். அதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி இருந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் தனது பணத்தை மீளத் தருமாறு முகவருடன் தர்க்கம் புரிந்த நிலையிலும் பணத்தை முகவர் கொடுக்க மறுத்துள்ளார். இதனால் ஏற்பட்ட விரக்தியில் தனது உயிரை மாய்க்க முயன்றுள்ளார்

அதனை அவதானித்த வீட்டார், அவரை மீட்டு புங்குடுதீவு வைத்திய சாலையில் அனுமதித்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
17.07.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 01

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# கனடாவால் என்ன செய்ய முடியும்?

கொழும்புத் தூதரக இராஜதந்திரிகள் அவ்வப்போது யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதை ஒரு செயல்பாடாக வைத்திருக்கின்றனர். ஆனால், அவ்வாறானவர்கள் கிழக்கு மாகாணத்துக்கு எப்போதாவது செல்வதுண்டு - அவ்வாறான சந்தர்ப்பங்களிலும்கூட பரவலான சந்திப்புகளில் ஈடுபடுவதில்லை. யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த கனடிய தூதுவர் எரிக் வோல்ஸ் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்தபோது, அரசாங்கத்தின் செயல்பாடுகளை பாராட்டியதுடன், போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கை கட்டியெழுப்புவதற்கு கனடா உதவுமென்று தெரிவித்திருக்கிறார்.

கனடாவுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் ஒரு பிணைப்பு உண்டு. அதாவது, புலம்பெயர்ந்த தமிழர்களில் பெரும்பான்மையினர் கனடாவில்தான் வாழ்கின்றனர். அப்படிப் பார்த்தால் யாழ்ப்பாணத்தின் பெரும்பான்மையானவர்கள் கனடியர்களாக மாறிவிட்டனர். வடக்கு - கிழக்கின் மத்திய தர வர்க்க இளைஞர், யுவதிகள் இப்போதும் கனடா கனவுடன்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் கனடாவின் உள்நாட்டு அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு வெளிநாட்டு சமூகமாக ஈழத் தமிழர்கள் வளர்ச்சியுற்றிருக்கின்றனர். ஈழத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் அமைச்சராக இருக்குமளவுக்கு கனடாவின் தேர்தல் அரசியலில் ஈழத் தமிழர்கள் தவிர்க்க முடியாதவர்களாக இருக்கின்றனர். அவ்வப்போது இனப்படுகொலை, மனித உரிமைகள் மீறல் பற்றிப் பேசுவதிலிருந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின்மீதான தடையை நீக்குவோம் என்று கூறுமளவுக்கு கனடிய அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை வழங்குவது உண்டு. இது முற்றிலும் தமிழர்களின் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டது.

கனடிய அரசியல்வாதிகளின் கருத்துகள் - செயல்பாடுகள் இலங்கையில் இரு விதமான அதிர்வலைகளை ஏற்படுத்திருக்கின்றன. தென்னிலங்கை அரசியல்வாதிகள் கனடிய அரசியல்வாதிகளை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்றே பார்க்கின்றனர். ஆனால், மறுபுறமோ கனடாவில் நினைத்ததை எல்லாம் செய்யவும் - பேசவும் கூடிய சூழலுக்காக ஈழத் தமிழர்கள் கனடாவைப் போற்றுகின்றனர்.

இவ்வாறான இருவேறுபட்ட அரசியல் அதிர்வலைகளுக்கு மத்தியில்தான் கனடிய தூதரக அதிகாரிகள் இலங்கையில் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். தென்னிலங்கையில் ஒருவாறும் வடக்கில் வேறு ஒரு மாதிரியும் அவர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஆனால், அடிப்படையில் கனடாவின் வாக்கு வேட்டை அரசியலுக்காக கனடிய அரசியல்வாதிகள் யதார்த்தத்துக்கு முற்றிலும் முரணாகப் பேசுவதானது எப்போதுமே சிக்கலானதுதான். ஈழத் தமிழர்கள் விடயத்தில் மட்டுமல்ல, இந்திய சீக்கிய சமூகத்தின் விடயத்திலும் கனடிய அரசியல்வாதிகள் வாக்கு வேட்டை அரசியலுக்காக பேசுவது இரகசியமான ஒன்றல்ல.

இந்த நிலையில், கனடாவால் என்ன செய்ய முடியும் என்பது ஓர் அடிப்படையான கேள்வியாகும். ஆனால், ஒரு செல்வந்த நாடு என்னும் வகையில் வடக்கு - கிழக்கின் அபிவிருத்தி விடயத்தில் கனடா காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும். ஆனால், இதுவரையில் அவ்வாறான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு சான்றில்லை. வெறுமனே மனித உரிமைகள், ஜனநாயகம் என்னும் சொல்லால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மைகளை செய்துவிட முடியாது.

கடந்த பதினாறு வருடங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை நகர்த்தியதில் ஓர் இணைத் தலைமை நாடு என்னும் வகையில் கனடா பிரதான பங்கை ஆற்றிருக்கிறது. ஆனால், அதனால் நடந்த நன்மை என்ன? இப்போதும் வடக்கில் புதைகுழிகள்தானே எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான சூழலில்கூட, ஆகக்குறைந்தது இலங்கையில் சில அடிப்படையான விடயங்களில்கூட முன்னேற்றங்கள் ஏற்படவில்லையே! அவ்வாறாயின், கனடா போன்ற நாடுகள் இதுவரையில் சர்வதேச அழுத்தத்தைக் கையாண்டதில் என்ன பயனுண்டு? எனவே, இந்த அனுபவத்திலிருந்து நோக்கினால் கனடியத் தூதுவர் கூறுவது போன்று, வடக்கு - கிழக்கின் அபிவிருத்தி விடயங்களுக்கு கனடாவால் உதவ முடிந்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உண்மையிலேயே நன்மையடைவார்கள்.

# இலங்கை தூதரகத்துக்கு நிவாரணம் வழங்கிய சென்னை மேல் நீதிமன்றம்

*சென்னை, ஜூலை 17*

*சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதரகம், அதன் முன்னாள் ஊழியரான இந்தியப் பிரஜை ஒருவரை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என உத்தரவிட்ட தனி நீதிபதியின் உத்தரவை, சென்னை மேல் நீதிமன்றம் இடைநிறுத்தியுள்ளது.*

*துணை தூதரகம் தாக்கல் செய்த மேன்முறையீட்டை ஏற்றுக்கொண்டு, மூவரடங்கிய நீதிபதிகள் ஆயம் இதற்கான உத்தரவை வழங்கியுள்ளது.*

*2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை, இலங்கை துணை தூதரகத்தில் தூதரக உதவியாளராக பணியாற்றிய டி.செந்தில்குமாரி முன்னதாக, சென்னை மேல் நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.*

*தாம் தவறான முறையில் பணிநீக்கம் செய்யப்பட்டதாகவும், தம்மை மீண்டும் பணியமர்த்தவேண்டும் எனவும் அவர் கோரியிருந்தார்.*

*இருப்பினும், அவர் ஒப்பந்த அடிப்படையிலேயே பணியமர்த்தப்பட்டிருந்ததாகவும், 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி ஒப்பந்தம் முடிவடைந்ததாகவும், இலங்கை துணை தூதரகத் தரப்பு மேன்முறையீட்டில் தெரிவித்துள்ளது.*

*அத்துடன், மீண்டும் அவரை பணியமர்த்துவதற்கான எந்தவொரு சட்ட அடிப்படையும் இல்லை எனவும் அந்த தரப்பு வலியுறுத்தியது.*

*இந்தியாவின் 1947 ஆம் ஆண்டு தொழில் பிணக்கு சட்டத்தின் கீழ், வெளிநாட்டுத் தூதரகங்கள் “தொழில்” என்ற வரையறைக்குள் அடங்காது எனவும், துணை தூதரகம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வாதிட்டார்.*

*கடந்த பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட தீர்ப்பில், இந்தியாவில் செயல்படும் வெளிநாட்டுத் தூதரகங்கள், இந்தியக் குடிமக்களை பணியமர்த்தும்போது, இந்தியத் தொழிலாளர் மற்றும் சமூகப் பாதுகாப்பு சட்டங்களை கடைப் பிடிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை என, தனி நீதிபதி கூறியிருந்தார்.*

*1972 ஆம் ஆண்டு இராஜதந்திர உறவுகள் தொடர்பான வியன்னா உடன்படிக்கையின் பிரகாரம் இராஜதந்திர பணியில் உள்ள வெளிநாட்டினர் மட்டுமே, தாம் பணியில் உள்ள நாட்டின் சமூகப் பாதுகாப்புச் சட்டங்களிலிருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள்.*

*எனினும், உள்ளூர் ஊழியர்களைக் கையாளும் போது, இந்தியாவில் முதலாளிகளுக்குப் பொருந்தக்கூடிய சமூகப் பாதுகாப்பு சட்டங்களை, இராஜதந்திர முகவர்கள் பின்பற்ற வேண்டும் என்று தனி நீதிபதி கூறினார்.*

*அத்துடன், இந்தியத் தொழிலாளர்களுக்கான சட்ட விதிமுறைகளை மீறுவதற்கு இராஜதந்திர விலக்குரிமையைப் பயன்படுத்த முடியாது என்றும் கூறினார்.*

*இவ்வாறான பின்னணியில், குறித்த தீர்ப்புக்கு எதிராக இலங்கை துணை தூதரகம் தாக்கல் செய்த மேன்முறையீட்டை ஏற்றுக் கொண்டு, முந்தைய தனி நீதிபதியின் தீர்ப்பைச் செயல்படுத்துவதைச் சென்னை மேல் நீதிமன்றின் மூவரடங்கிய நீதிபதிகள் ஆயம் இடைநிறுத்தியுள்ளது.*

*இந்தநிலையில், இந்தியத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் தூதரக பணிகள், தொழில் என்ற வரையறைக்குள் உள்ளடங்குமா என்பது குறித்து ஆராய உள்ளதாகவும், சென்னை மேல் நீதிமன்றம் நீதிபதிகள் ஆயம் அறிவித்துள்ளது. (அ)*

# இலங்கையில் குழந்தை பெறுவதை ஒத்திவைக்கும் இளம் தலைமுறை!

## பிறப்பு வீதத்தில் கடுமையான தாக்கம்

*கொழும்பு, ஜூலை 17*

*இளம் தலைமுறையினர் குழந்தை பெறுவதை ஒத்திவைப்பதால், இலங்கையில் பிறப்பு வீதம் கடுமையாகச் சரிந்து வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.*

*ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின், 2025 உலக சனத்தொகை அறிக்கையை வெளியிடும் நிகழ்வில் கலந்து கொண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் லக்ஷமன் திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.*

*இளம் தம்பதிகள் அதிக குழந்தைகளைப் பெற விரும்பினாலும், நிதி உறுதியற்ற தன்மை, தொழில் பாதுகாப்பின்மை மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகள் அவர்களை ஊக்கப்படுத்துவதில்லை.*

*இது நாட்டை ஒரு “கருவுறாமை பொறிக்குள்” தள்ளுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.*


*தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் தரவுகளுக்கமைய, தற்போது சனத்தொகை வளர்ச்சி வீதம் மிகக் குறைவாக உள்ளது.*

*1871 ஆம் ஆண்டு முதல் எப்போதும் இல்லாத அளவுக்கு, சனத்தொகை வளர்ச்சி வீதம் 0.5 சதவீதத்தை எட்டியுள்ளது.*

*அத்துடன், ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் தரவுகளின்படி, தேசிய கருவுறுதல் வீதம் தற்போது ஒரு பெண்ணுக்கு 1.9 குழந்தை என்ற விகிதத்தில், முந்தையை நிலைக்கும் குறைவாக உள்ளது.*

*கருவுறுதல் சரிவு என்பது தனிப்பட்ட ஆசைகளால் ஏற்பட்டதல்லவெனவும் மாறாக அமைப்புகள் தோல்வியடைந்ததால் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக, திருமணங்கள் தாமதமானதால் ஏற்பட்டுள்ளதாகவும், பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார். (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதிர்காலம் பற்றிய வீண்டென்ஷன் வந்து செல்லும். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும் எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**மிதுனம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். வாகன வசதி பெருகும். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள்.உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**கன்னி**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**துலாம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**விருட்சிகம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். தாயாருக்கு மருத்துவ செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும்.

**மகரம்**
அரசால் ஆதாயம் உண்டு. உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். பழைய சரக்குகளை விற்பீர்.

**கும்பம்**
குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னைகள் விலகும். செலவுகளை குறைக்க திட்டமிடுவீர்கள். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். உடல் நலம் சீராகும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும்.

# களஞ்சியசாலைகளுக்கு நெல் வழங்கல் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூலை 17

அரசாங்கத்தின் நெல் நிர்ணய விலைக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளுக்கு நெல்லை வழங்க ஆரம்பித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2025 சிறுபோக நெற் செய்கை 31 ஆயிரத்து 500ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. அறுவடை ஆரம்பிப்பதற்கு முன்பே அரசாங்கம் நிர்ணய விலையை அறிவித்த நிலையில் விவசாயிகள் தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கி வருகின்றனர்.

ஒரு கிலோ நாட்டரிசி 120 ரூபாய், சம்பா 125 ரூபாய், கீரி சம்பா 132 ரூபாய் என அரசாங்கம் நெல்லுக்கு விலை நிர்ணயித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# உடுவில் மகளிர் கல்லூரி மாணவ முதல்வர்களுக்கு சின்னம் சூட்டல்



யாழ்ப்பாணம், ஜூலை 17

உடுவில் மகளிர் கல்லூரி மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் அதிபர் ரொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

மாணவ தலைவியாக தருணி, விளையாட்டு போட்டி தலைவியாக சுஜித்தா, சிரேஷ்ட மாணவ தலைவிகளாக டிறோசினி, பதுமிதா, அபிஷா, கம்சத்வேணி, விடுதி தலைவியாக புரட்சி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு சின்னஞ் சூட்டப்பட்டனர்.

(ஐ-05)

# சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

நீர்வேலி கந்தசுவாமி கோயில் நடத்தும் வாராந்த சுக்கிரவார கந்த புராண படன தொடர் 30ஆவது சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு நடைபெறும். ஆலய பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார். தொடர்ந்து சிறப்புச்சொற்பொழிவை இளம் சைவப்புலவர் த. மனோஜ்குமார் "மாயை உபதேச படலம் " என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார். (ஐ)

* * *

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்த திருவிளையாடல் புராண சிறப்பு சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பரஞ்சோதி முனிவர் குருபூசையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வு நடைபெறும். தொடர்ந்து, சைவப்புலவர் க. கயிலைநாதன் "மாணிக்க படலம்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

# 'பம்பாய் சைக்கிள்' நாவல் அறிமுகம் நடைபெற்றது!



யாழ்ப்பாணம், ஜூலை 17

எழுத்தாளர் இரவி அருணாச்சலம் எழுதிய "பம்பாய் சைக்கிள்" நாவல் அறிமுக விழா யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

எங்கட புத்தகங்கள் இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநிலை உதவி கல்விப் பணிப்பாளர் விந்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. அறிமுக உரையை ஆய்வாளரும் விமர்சகருமான சி. ரமேஷ் நிகழ்த்தினார். தொடர்ந்து நயப்புரையை விமர்சகர் சி. விமலன் ஆற்றினார்.

வாசகர் சார்பில் விமர்சன உரையியை மூத்த எழுத்தாளர் அ. யேசுராசா நிகழ்த்தினார். வாசகர்களின் கருத்துப் பகிர்வுகளை தொடர்ந்து நூல் ஆசிரியர் இரவி அருணாச்சலம் ஏற்புரை ஆற்றினார்.

இந்திய அமைதி காக்கும் படை ஈழத்தில் புகுந்த நாளிலிருந்து வெளியேறிய நாள்வரை மண்ணுக்கும் மக்களுக்கும் நிகழ்ந்தவற்றை ஆவணப்படுத்துவதாக பம்பாய் சைக்கிள் நாவல் படைக் கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# யாழ். மாநகர சுகாதார குழுவினர் கல்லுண்டாயை பார்வையிட்டனர்



யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் இம்மானுவல் தயாளன், சுகாதார குழு தலைவர் சி. சாருபன் மற்றும் சுகாதாரக் குழு உறுப்பினர்கள் கல்லுண்டாய்வெளிக்கு சென்று அங்குள்ள பிரச்னைகள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

அத்துடன், எதிர்கால செயல்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடினர். சுகாதார குழுத் தலைவராக தெரிவு செய்யப்பட்டு சில மணி நேரத்தில் அதன் தலைவர் குழுவினருடன் இந்தக் களத் தரிசிப்பில் ஈடுபட்டிருந்தார்.

[illegible] கல்லுண்டாய் வெளி பகுதிகளில் தேங்கியுள்ள திண்மக் கழிவுகளால் அந்தப் பகுதிகளில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள், அவற்றை தரம் பிரித்து அகற்றுவதில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் தொடர்பில் இது தொடர்பில் ஆராயப்பட்டன. அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பிலும் முன்மொழியப்பட்டன.

(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச வைத்தியசாலைகளில் மருந்துகள் மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறை

## சிகிச்சைகளை வழங்குவதில் கடும் நெருக்கடி

கொழும்பு, ஜூலை 17

**அரச வைத்தியசாலைகளில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு பற்றாக்குறை நிலவி வருவதுடன் நோயாளர்களுக்கான சிகிச்சை சேவைகளை வழங்குவதில் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

மேலும் மருந்துப் பற்றாக்குறைக்கு மாற்றுத் தீர்வாக அறிவிக்கப்பட்டுள்ள வெளியிடங்களில் மருந்து கொள்வனவு செய்யும் முறை தொடர்பில் உரிய வழிகாட்டல்களை வழங்குமாறு சுகாதார அமைச்சிடம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நோயாளர்களுக்கான சிகிச்சை சேவைகளை தொடர்ச்சியாக வழங்க வைத்தியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். இதற்கு அனைத்து வைத்தியசாலைகளிலும் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் கையிருப்பில் இருப்பது அவசியம். எனினும் சமீப நாட்களாக அரச வைத்தியசாலைகளில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன் நோயாளர்களுக்கான சிகிச்சை சேவைகளை வழங்குவதிலும் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சுகாதார அமைச்சால் மருந்து விநியோகம் உள்ளிட நிர்வாக நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படாமையால் தற்போது மருந்து பொருட்களுக்கு இவ்வாறு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும் வைத்தியசாலையில் மருந்து பற்றாக்குறை ஏதேனும் ஏற்படும் பட்சத்தில் சுகாதார அமைச்சின் புதிய திட்டத்துக்கமைய அவற்றை வெளியிடங்களில் கொள்வனவு செய்யுமாறு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். எனினும் அண்மையில் அரச வைத்தியசாலை ஒன்றின் வைத்தியர் மருத்துவ உபகரணங்களை வெளியிடங்களில் கொள்வனவு செய்தமைத் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் வைத்தியர்கள் வெளியிடங்களில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்ய தயக்கம் தெரிவித்து வருகின்றனர்.

வைத்தியர்களுக்கு உரிய பாதுகாப்பு இன்மையால் இவ்வாறானதொரு நிலை உருவாகியுள்ளதுடன், ஒரு சில வைத்தியசாலைகளில் அறுவைச் சிகிச்சைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆகையால் உடனடியாக மருந்து பற்றாக்குறைக்கு மாற்றுத் தீர்வாக அறிவிக்கப்பட்டுள்ள வெளியிடங்களில் மருந்துக் கொள்வனவு செய்யும் முறை தொடர்பில் உரிய வழிகாட்டல்களை வழங்குமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கிறேன்-என்றார். (அ)

# யானை - மனித மோதலை கட்டுப்படுத்த புதிய விதிகள்



கொழும்பு, ஜூலை 17

தற்போது அதிகரித்து வரும் யானை - மனித மோதலை கட்டுப்படுத்தும் வகையில் சுற்றாடல் அமைச்சினால் புதிய ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, யானைகளை வேட்டையாடுதல் மற்றும் அங்கீகரிக்கப்படாத மின்சார வேலிகளை அமைத்து அவற்றைக் கொல்லுதல் என்பன கடுமையான குற்றங்கள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராக, கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தி மற்றும் பிரதியமைச்சர் அன்ரன் ஜயக்கொடி ஆகியோர் தலைமையில் நேற்று முன் தினம் சுற்றாடல் அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், "பாத்திய" என்ற யானை கடந்த சில நாட்களுக்கு முன்பு துப்பாக்கிச்சூட்டுக்கு உள்ளான நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்தது.

இதனையடுத்து, குறித்த யானையின் பிரேதப் பரிசோதனை நடத்தப்படவுள்ளதாகச் சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க பட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவு கிடைத்தவுடன் பேராதனை பல்கலைக் கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்துடன் இணைந்து பரிசோதனை நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# மேலதிக ஆசிரியர்களின் தரவு சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு, ஜூலை 17

பாடசாலைகளில் உள்ள மேலதிக ஆசிரியர்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகளை உடனடியாக சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது.

குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் கல்வி கற்கும் கிராமப்புற பாடசாலைகளில் அதிகளவிலான ஆசிரியர்கள் இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

சில பாடசாலைகளில் ஆசியிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நாட்டின் ஆசிரியர் ஆட்சேர்ப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு ஏற்ப நாடளாவிய ரீதியிலுள்ள ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்ய அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளும் என கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார். (அ)

# வெளிநாடுகளுக்குச் சென்ற 7,735 இலங்கையர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 17

பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற 7735 இலங்கையர்கள் கடந்த 15 வருடங்களில் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் உயிரிழந்தவர்களில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்குச் சென்றவர்கள் தொடர்பான தகவல்கள் தங்களுடைய கட்டுப்பாட்டில் இல்லையெனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் கடந்த 15 வருடங்களில் பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற 7735 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாகவும் அவற்றில் 4769 உடல்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதும், 2966 உடல்கள் இன்னும் நாட்டுக்கு கொண்டுவரப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொண்டு வரப்பட்ட ஒரு உடல் இன்னும் உறவினர்களால் அடையாளம் காணப்படவில்லையெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வைத்தியசாலையில் மூத்த நடிகையிடம் கைவரிசை

கொழும்பு, ஜூலை 17

மூத்த நடிகை தமயந்தி பொன்சேகா கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்தபோது அவரது கைப்பையை யாரோ ஒருவர் திறந்து, அவரது பணம், வங்கி அட்டைகள் மற்றும் தேசிய அடையாள அட்டையை திருடிச் சென்றுள்ளனர்.

திருமதி பொன்சேகா ஒரு மருத்துவரை அணுகுவதற்காக ஒரு நெரிசலான லிப்டில் சென்று கொண்டிருந்தபோது இந்த சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது. நெரிசலுக்கு மத்தியில், ஒரு திருடன் அவரது கைப்பையை ரகசியமாக எடுத்து, அவருக்குத் தெரியாமல் மதிப்பு மிக்க பொருட்களை எடுத்துச் சென்றுள்ளான். (அ)

# அரச வங்கியில் மோசடி முன்னாள் அதிகாரி கைது!

கொழும்பு, ஜூலை 17

அரச வங்கியொன்றின் முன்னாள் அதிகாரி ஒருவர், வங்கியின் தலைமை அலுவலகத்தில் நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து 188, 825,000 ரூபா பணத்தைப் பெற்றதற்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

மோசடி தொடர்பாக கிடைத்த முறைப்பாட்டைய டுத்து நடத்தப்பட்ட விசார ணையைத் தொடர்ந்து, சந்தேக நபர் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு, வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார். (அ)

# பராமரிப்பு நிலையங்களில் உள்ள சிறுவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பது அரசின் பொறுப்பு!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஜூலை 17

பல்வேறு காரணங்களினால், சமுதாயத்தில் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் சிறுவர் இல்லங்களில் வசித்துவரும் சிறுவர்களின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாத்துக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்பும் ஆகும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பராமரிப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் சிறுவர்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டுத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிரதமர் இதனை தெரிவித்திருந்தார்.

பிரதமர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பல்வேறு காரணங்களினால், பல்வேறு சந்தர்ப்பங்களில், சமுதாயத்தில் பெற்றோரின் அரவணைப்போடு தமது இல்லத்தில் வாழவேண்டிய வாய்ப்பை இழக்கின்ற சிறுவர்களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற கடைசித் தேர்வாகவே சிறுவர் இல்லமோ அல்லது அத்தகைய பாதுகாப்பு மையங்களோ அமைகின்றன.

அத்தகைய இடங்களில் வசித்து வருகின்ற சிறுவர்களின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாத்துக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்பும் ஆகும். ஒரு அரசாங்கம் என்ற வகையில் இந்த சிறுவர்களின் கல்வியை உறுதிப்படுத்துதல், அவர்களின் உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கின்றது.

ஆகையினால் அனைத்துப் பிள்ளைகளையும் அந்த அனைத்து சிறுவர்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலிருந்து அரசாங்கத்தால் நழுவி விட இயலாது.பாதுகாப்பு இல்லங்களில் வாழ்ந்து வருகின்ற பிள்ளைகளையும் எமது பிள்ளைகளாகவே கருத வேண்டும். ஏனைய சிறுவர்களுக்கு இருக்கின்ற சகல உரிமைகளும் இச்சிறுவர்களுக்கும் இருக்கின்றது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# வாசனைத் திரவியத்தை நுகர்ந்த மாணவர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூலை 17

வாசனைத் திரவியத்தை நுகர்ந்த பாடசாலை மாணவர்கள் மூவர் தலைச்சுற்றல், வாந்தி மற்றும் சுவாசிப்பதில் சிரமம் காரணமாக நேற்று புதன்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக லிந்துலை பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி அசேல மல்லவராச்சி தெரிவித்தார்.

தலவாக்கலை நகரில் உள்ள ஒரு முன்னணி தமிழ்ப் பாடசாலையொன்றின் மாணவன் ஒருவன் நேற்று புதன்கிழமை அன்று ஒரு வாசனைத் திரவியத்தை தனது தோழர்கள் மீது தெளித்துள்ளதாகவும், பின்னர் அவர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த மாணவர்களின் நிலை மோசமாக இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக குறித்த பாடசாலையின் அதிபரிடம் விசாரித்தபோது, 6 ஆம் வகுப்பு கல்வி கற்கும் மாணவன் ஒருவன் தலைவலிக்கு பயன்படுத்தப்படும் மருந்தை வாசனைத் திரவியம் என நினைத்து கொண்டு வந்து தனது வகுப்பு தோழர்கள் மீது தெளித்துள்ளதாக கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பயங்கரவாதச் சட்டத்தை இன, மத அடிப்படையில் பயன்படுத்தவில்லை

## அது விரைவில் நீக்கப்படும் என்கிறது அரசு

கொழும்பு, ஜூலை 17

"பயங்கரவாத தடைச்சட்டம் இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தப்படுவதில்லை. அதே ஸ்ரீபோல அச்சட்டம் வெகு விரைவிலேயே நீக்கப்படும்." – என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் முஸ்லிம்கள் மட்டுமே கைது செய்யப்படுகின்றனர் எனக் கூறப்படும் கருத்தை ஏற்கமுடியாது. அவ்வாறான தொரு விம்பத்தை சமூகத்தில் ஏற்படுத்த முற்படவும் கூடாது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒருவரை கைது செய்ய வேண்டுமெனில் அது விடயத்தில் இனம் மற்றும் மதம் என்பன தாக்கம் செலுத்தாது. விசாரணை நடவடிக்கை என்பதே முக்கியம். பயங்கரவாத தடைச்சட்டமானது இனத்தை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தப்படுவதில்லை.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் எமக்கு விமர்சனம் உள்ளது.

அச்சட்டத்தை நீக்கு வதற்கு குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றதும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரையில் நடைமுறையில் உள்ள சட்டத்தைதான் பயன்படுத்த நேரிடும்- என்றார். (அ)

# இன்னும் முடிவு எடுக்கவில்லை



கொழும்பு, ஜூலை 17

ஐக்கிய மக்கள் சக்தியின் உதவித் தலைவராக தாம் நியமிக்கப்பட உள்ளதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்தி அறிக்கையைப் பற்றி குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, தனது அரசியல் எதிர்காலம் குறித்து இன்னும் எந்த முடிவை யும் இறுதி செய்யவில்லை என்றார்.

இருப்பினும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, தன்னைக் கட்சியில் சேர அழைத்ததாக அவர் கூறினார்.

"பிரேமதாச என்னை கட்சியில் சேர அழைத்தார், ஆனால் இன்னும் எதுவும் இறுதி செய்யப்படவில்லை" என்று அவர் அளித்த பேட்டியில் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜயசேகர 2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டார், அதே நேரத்தில் இலங்கை சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவும் இருந்தார். (அ)

# பெண் பொலிஸ் அலுவலர்களுக்கு அழகுக் கலை நிலையம் திறப்பு!



கொழும்பு, ஜூலை 17

கொழும்பு, திம்பிரிகஸ்யாயவில் உள்ள பொலிஸ் களப் படைத் தலைமையகத்தில் புதிதாக மேம்படுத்தப்பட்ட 'ருசிரி' எனப்படும் அழகுக் கலை நிலையம், நேற்று முன் தினம் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் தலைமையில் அதிகாரபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

பொலிஸ் சேவையின் மகளிர் பிரிவால் தொடங்கப்பட்ட இந்த அழகுக் கலை நிலையம், பொலிஸ் அதிகாரிகள், அவர்களது குடும்பங்கள் மற்றும் பிற தொடர்புடைய தரப்பினருக்கு குறைந்த விலையில் அழகுபடுத்தும் சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பொலிஸ் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு அழகுபடுத்தல் மற்றும் அழகு பராமரிப்பை அணுகுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது.

இந்த முயற்சியின் சிறப்பு அம்சம் என்னவென்றால், பொலிஸ் அதிகாரிகளின் அனுபவம் வாய்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு அழகு நிலையத்தில் சேவைகளை வழங்க வாய்ப்பு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் நாடு முழுவதும் இதேபோன்ற சேவை மையங்களை நிறுவுவதற்கான திட்டங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பொலிஸ் குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பயனடைய முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொன்சேகா மீதான தற்கொலை தாக்குதல் வழக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூலை 17

2006 ஆம் ஆண்டு கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்திய அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை படுகொலை செய்ய முயன்றதாகக் கூறி மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மேலதிக விசாரணையை ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை ஒத்திவைத்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதவான் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை குறிவைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தி படுகொலை செய்ய சதி செய்தமை உட்பட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்ட விதிமுறைகளுக்கு அமைய 27 குற்றச்சாட்டுகளின் கீழ் மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது 2006 ஆம் ஆண்டு கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்திய அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை படுகொலை செய்ய முயன்றதாகக் கூறி மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மேலதிக விசாரணை ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை ஒத்திவைத்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நேற்று சாட்சியமளிக்க திட்டமிடப்பட்டிருந்த சாட்சியாளர், நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தினால் வழக்கின் சாட்சியங்களை விசாரணைக்குட்படுத்த மற்றொரு திகதியை வழங்குமாறு முறைப்பாட்டு தரப்பு சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மாலி கருணாநாயக்க நீதிமன்றில் கோரினார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதவான் குறித்த வழக்கில் மேலதிக சாட்சி விசாரணையை ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளார். (அ)

# சுஜீவ சேனசிங்க நேற்று பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, ஜூலை 17

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவை 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சுமார் 10 கோடி ரூபாய் பெறுமதியான வீ-8 ரக அதிசொகுசு வாகனமொன்றை சட்டவிரோதமாக ஒன்று சேர்த்த குற்றச்சாட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் நேற்று அவர் நீதிமன்றில் முன்னிலையானபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம். மரிக்கார், தயாசிறி ஜயசேகர, உதய கம்மன்பில, மனோ கணேசன் மற்றும் பழனி திகாம்பரம் உள்ளிட்டோர் நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்தனர்.

பிணையில், செல்ல அனுமதி வழங்கப்பட்டதை யடுத்து, நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க-

முன்னதாக டொயோட்டா நிறுவனத்திலிருந்து கொண்டுவரப்பட்ட எனது வாகனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

அதன்போது, இந்த நீதிமன்றின் முன்னாள் நீதவான், அந்த வாகனத்தை நன்கு ஆராய்ந்து அதில் எந்தவிதத்தி லும் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்து அதனை என்னிடம் ஒப்படைத்தார்.

அதன்பின்னர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் இதே நீதிமன்றத்துக்கு வந்து, எனது வாகனத்தின் மேற்பகுதி பழுதுபார்க்கப்பட்டுள்ளதாக வழக்கு தாக்கல் செய்தனர்.

வாகனமொன்றை பழுது பார்த்தமைக்காக இலங்கை வரலாற்றில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்கு இதுவாகும்.

சுமார் 1000 இலட்சம் ரூபாவுக்கு மேல், எனது வழக்குக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் செலவிட்டுள்ளதென நினைக்கிறேன்.

மக்களின் பணத்தை மீதப்படுத்துவதற்காக ஆட்சிக்கு வந்த அரசாங்கம் எதனையும் செய்வில்லை.

பாராளுமன்ற உணவகத்தில் அமர்ந்துகொண்டு எங்களிடம் ராஜபக்ஷக்களை விமர்சித்த அநுரகுமார திஸாநாயக்க இன்று முதலாளித்துவத்தின் தந்தையாக மாறியுள்ளார்.

சட்டவிரோத செயல்கள் குறித்து பேசிய, அநுரகுமார திஸாநாயக்க அசியாவிலேயே மிகப்பெரிய சர்வாதிகாரியாக மாறியுள்ளார் என தோன்றுகிறது.

பொலிஸாரின் இராச்சியமாக இந்த நாட்டை அவர் மாற்றிக்கொண்டு வருகிறார்.

அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்டோர் குறிவைக்கப்பட்டிருந்தால், தற்போது 10 - 15 வருட சிறைத்தண்டனை பெற்றிருப்பர். அவர்களின் பயணம் மிகவும் குறுகிய காலத்தில் நிறைவுபெறும்-என்றார். (அ)

தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு:

# ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் 6 உறுப்பினர்கள் இடைநிறுத்தம்!

கொழும்பு, ஜூலை 17

களுத்துறை - பேருவளை நகர சபையின் தலைவர், உப தலைவர் தெரிவின்போது தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த பேருவளை நகர சபையின் ஐக்கிய மக்கள் சக்தியின் 6 உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் கையொப்பத்துடன் வெளியிட்டுள்ள கடிதத்திலே இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில், ஐக்கிய மக்கள் சக்தி கட்சி முகாமைத்துவ குழு மற்றும் கட்சி செயல் குழுவின் தீர்மானத்துக்கு அமைய பேருவளை நகர சபை தலைவர், உப தலைவர் தெரிவின்போது செயல்படாத காரணத்தால் பேருவளை நகர சபையின் உறுப்பினர்களான எம். முஸ்பிர், எம். எவ். எம். இஷாம், எம். மஸாஹிம், டி. விமலசிறி சில்வா, எம். என். எம். இர்ஷாத், எம். ஆர். எவ். ரிஹானா ஆகியோரின் கட்சி உறுப்புரிமை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது - என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் புதிய தகவல்கள் அம்பலம்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஜூலை 17

**“உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரையில் வெளியாகாத பல தகவல்கள் விசாரணைகளில் வெளிவந்த வண்ணமுள்ளன. அதன் ஒரு பகுதியையே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.”**

-இவ்வாறு அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் இமேலும் தெரிவிக்கையில்-உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஆசாத் மௌலானா உட்பட தேவையான நபர்களை நாட்டுக்கு கொண்டுவருவதற்குரிய இராஜதந்திர நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுவருகின்றது. இது விடயத்தில் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை.

இதுவரையில் வெளிவராத பல தகவல்கள் விசாரணைகளில் வெளிவந்தவண்ணமுள்ளன. அவற்றின் ஒரு பகுதியையே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சபையில் பகிரங்கப்படுத்தினார். விசாரணைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் சிலர் கைது செய்யப்படலாம். விசாரணைகள் இன்னும் நிறைவு பெறவில்லை. அது விரைவுபடுத்தப்பட்டு, நீதிமன்றம் ஊடாக உரிய நடவடிக்கை இடம்பெறும்-என்றார். (அ)

# ஜுலை முதல் 13 நாட்களில் மட்டும் 79,771 சுற்றுலா பயணிகள் வருகை!




கொழும்பு, ஜூலை 17

இந்த மாதத்தின் முதல் 13 நாட்களில் 79,771 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா மேம் பாட்டு பணியகம் அண்மைய தரவுகளின்படி, இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து நாட் டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,247,815 ஐ தாண்டியுள்ளது.

முதல் 13 நாட்களில், அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர்.

இதில் 16,329 பேர் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர்.

இது 20.5 சதவீதமாகும். இதற்கு அடுத்தபடியாக ஐக்கிய இராச்சியத்தில் இருந்தும், ஆஸ்திரேலியாவில் இருந்தும் அதிகளவானோர் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த ஆண்டு, இலங்கைக்கு அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர்.

இந்த ஆண்டு இந்தியாவில் இருந்து 258,323 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

(அ)

# வெலிகமவில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஜூலை 17

வெலிகம, உடுகாவ பகுதியில் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூடு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 4:40 மணியளவில் உடுகாவாவில் உள்ள ஒரு சட்டத்தரணியின் வீட்டின் மீது மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.எனினும், இந்த துப்பாக்கிச் சூட்டினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

பொலிஸாரின் விசாரணையின் படி, குறித்த சட்டத்தரணிக்கு முன்னதாகவே கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

எவ்வாறெனினும் இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 35 கிலோ தங்கத்துடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 17

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 35 கிலோ கிராம் தங்கத்துடன் நபர் ஒருவர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதியானது 1.1 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் கிரேண்ட்பாஸ் பகுதியில் வசிக்கும் 32 வயதுடைய தொழிலதிபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முன் தினம் காலை 8:40 மணிக்கு துபாயிலிருந்து எமிரேட்ஸ் விமானம் ஈ.கே-650 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். (அ)

# வைத்தியர் மீது பாலியல் வன்கொடுமை சந்தேக நபரின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 17

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பயிற்சி பெண் வைத்திய நிபுணர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மீண்டும் வாக்குமூலம் அளிப்பதற்காக சந்தேகநபரான முன்னாள் இராணுவ சிப்பாய் விடுத்த கோரிக்கையை அநுராதபுரம் பிரதான நீதவான் நிராகரித்துள்ளார்.

குறித்த வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அனுராதபுரம் பிரதான நீதவான் நாலக சஞ்சீவ ஜயசூரிய சந்தேகநபரின் கோரிக்கையை நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் வாக்குமூலம் அளிப்பதற்கு அனுமதி வேண்டும் என சந்தேகநபரால் முன்வைத்த கோரிக்கைக்கு பதிலளித்த அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் உப பொலிஸ் பரிசோதகர் ஏ.சி. தயானந்த, பாதிக்கப்பட்ட வைத்தியவரை அவமதித்து அவரை அவமானப்படுத்தும் நோக்கில் பல்வேறு பொய்யான தகவல்களை வெளியிட சந்தேக நபர் வேண்டுமென்றே நீதிமன்றத்தைப் பயன்படுத்த முயற்சிப்பதாகக் கூறினார்.

அத்துடன் சந்தேகநபர் முன்பு திறந்த நீதிமன்றத்தில் முற்றிலும் பொய்யான தகவல்களை வெளியிட்டதாக உப பொலிஸ் பரிசோதகர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சந்தேக நபரான முன்னாள் இராணுவ சிப்பாயால் கொள்ளையிடப்பட்டிருந்த நிலையில், பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்ட வைத்தியரின் பெறுமதிமிக்க ஸ்மார்ட் போனை அரசு பகுப்பாய்வாளருக்கு அனுப்பி, பகுப்பாய்வாளரின் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பிரதான நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த குற்றத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முனனாள் இராணுவச் சிப்பாயை ஜூலை 29 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பிரதான நீதவான் உத்தரவிட்டார்.

சந்தேகத்திற்குரிய முன்னாள் இராணுவ சிப்பாயை டி.என்.ஏ பரிசோதனைக்கு உட்படுத்தி, அந்த வைத்திய அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அனுராதபுரம் பிரதான நீதவானால் இதற்கு முன்னர் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நீதிமன்றத்தில் மேலதிக அறிக்கையை சமர்ப்பித்த பொலிஸார் இந்த குற்றம் குறித்து தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகக் கூறினர்.

கல்னேவா புதிய நகரத்தைச் சேர்ந்த சந்தேகநபர் கே.பி. மதுரங்க ரத்நாயக்க, முன்னர் அடையாள அணிவகுப்புக்காக ஆஜர்படுத்தப்பட்ட போது, பாதிக்கப்பட்ட பெண் வைத்தியரால் அவரை அடையாளம் காண முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# 6 மாத காலத்தில் 144,379 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு பயணம்

கொழும்பு, ஜூலை 17

2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான ஆறு மாத காலப்பகுதியில், 1 இலட்சத்து 44 ஆயிரத்து 379 இலங்கையர்கள் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்குப் பயணித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

பெண் தொழிலாளர்களுடன் ஒப்பிடுகையில், ஆண் தொழிலாளர்கள் இந்த காலப் பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்லும் அளவு குறிப்பிடக்களவில் அதிகரித்துள்ளதுடன் இந்த காலப்பகுதியில் 88 ஆயிரத்து 684 ஆண் தொழிலாளர்கள் வெளிநாட்டு வேலைக்காக சென்றுள்ளனர்.

அதே நேரம் இந்த 6 மாத காலத்துக்குள் 55 ஆயிரத்து 695 பெண் தொழிலாளர்களும் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு சென்றுள்ளனர்.

இலங்கை தொழிலாளர்கள் பெரும்பாலானோர் வேலைவாய்ப்பிற்காக குவைத் நாட்டுக்கு சென்றுள்ளதுடன் அதன் எண்ணிக்கை 38 ஆயிரத்து 806 ஆகும்.

மேலும் 28 ஆயிரத்து 973 தொழிலாளர்கள் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும், 21 ஆயிரத்து 958 பேர் கட்டார் நாட்டிற்கும் வேலைவாய்ப்பிற்காக இந்த காலப்பகுதியில் சென்றுள்ளனர்.

தொடர்ந்து ஜப்பான், தென்கொரியா நாடுகளிற்கும் அதிகளவில் தொழிலாளர்கள் சென்றுள்ளனர்.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் இருந்துவரும் இலங்கையர்கள் 3.73 பில்லியன் டொலர்களை நாட்டுக்கு அனுப்பியுள்ளனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டு, 2025 ஆம் ஆண்டில் மொத்தமாக 7 பில்லியன் அமெரிக்க டொலர் பணப்பரிமாற்ற வருவாயை நாடு பெற்றுக் கொள்ளும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (அ)

# ரயில் சாரதிகள் ஜுலை 21 தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 17

ரயில்வே வண்ண சமிக்ஞை அமைப்பில் உள்ள குறைபாடுகள் சரி செய்யப்படாவிட்டால், எதிர்வரும் 21 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி முதல் ரயில் சாரதிகள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதாக லோகோமோட்டிவ் இயக்க பொறியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் முதல் படியாக, மருதானை, களுத்துறை, வெயாங்கொடை மற்றும் நீர்கொழும்பு பிரதேசங்களில் ரயில்களை சேவையிலிருந்து விலக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டியும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காததால்,

பயணிகள் மற் றும் சொத்துக்கள் பாதுகாப்புக் காக ரயில் சேவையிலிருந்து விலக்கிக் கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது.

வண்ண சமிக்ஞை அமைப்பில் உள்ள குறைபாடுகளை அரசாங்கம் ஒரு தேசியப் பிரச்சனையாக கருதி தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# குமரன்கடவை பிரதேச செயலக ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!



**திருகோணமலை, ஜூலை17**

**குமரன்கடவை (கோமரங்கடவல) பிரதேச செயலகத்தில் பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று நடைபெற விருந்த வேளையில், மாவட்ட செயலகத்தால் நிறுத்தப்பட்ட இடமாற்றத்தை நடைமுறைபடுத்த வேண்டும் எனக் கோரி பிரதேச செயலகத்தின் பிரதான நுழைவாயிலை மூடி கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.**

பல வருட காலமாக குமரன் கடவை பிரதேச செயலாளர் பிரிவில் இடமாற்றம் கிடைக்காமல் பலர் இருக்கும் நிலையில் சிலர் நகரப் பகுதியில் வேலை செய்ய வேண்டும் என்பதற்காக இந்த இடமாற்றத்தை நிறுத்தியுள்ளதாகவும் முறையான இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரியும் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, "என். பி. பி. ஆட்சியில் அரச ஊழியர்களுக்கு அநீதியா?", "அவசியம் இடமாற்றம் வேண்டும்", "வேலை கிடைத்தது முதல் ஓய்வு காலம் வரை இங்குதானா?" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இதன்போது குறித்த பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்துக்கு வருகைதந்த பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன உள்ளிட்டவர்களை உள்ளே செல்ல விடாமல் தடுத்து, தமக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில், பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தை நடத்துவதற்கு இடமளிக்குமாறும் தங்களுடைய கோரிக்கைக்கு சிறந்த தீர்வை பெற்றுத் தருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கூறியதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

அம்பாறை, ஜூலை 17

போலி ஆவணங்கள், ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளனர் என்று அம்பாறை - பக்கியெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

பக்கியெல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 4 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 4 தேசிய அடையாள அட்டைகள், 2 வெளிநாட்டு கடவுச்சீட்டுகள், சாரதி அனுமதி பத்திரம், 2 பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் கிராம சேவையாளர் சான்றிதழ் ஆகியவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மணல் அகழ்வை தடுப்பது குறித்து கலந்துரையாடல்!

சம்மாந்துறை, ஜூலை 17

சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவில் நடக்கும் சட்டவிரோத மணல் அகழ்வை தடுப்பது தொடர்பான கூட்டம் நேற்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனிபா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்பான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்தும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறை குறித்தும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அம்பாறை புவிச்சரிதவியல், அளவை சுரங்கங்கள் பணியகத்தின் பொறியியலாளர் ஜே.ஜெயரூபன், சம்மாந்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி கே.டி எஸ் ஜெயலத், மல்வத்தை விவசாய போதனாசிரியர் எம். டி, ஏ. கரீம் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர். (ஐ)

# குளத்தில் விழுந்து குழந்தை மரணம்!

அக்கரைப்பற்று, ஜூலை 17

அக்கரைப்பற்று - மீரா ஓடை குளத்தில் தவறி விழுந்து 2 வயது குழந்தை உயிரிழந்தது.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் நேற்றைய தினம் குழந்தை 2ஆவது பிறந்தநாளை கொண்டாவிருந்த குழந்தையே இவ்வாறு உயிரழந்தது.

குளத்தில் குழந்தை மிதப்பதை அவதானித்த உறவினர்கள் அதனை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். ஆனால், குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

குழந்தையின் மரணத்தை அடுத்து குளத்தை சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே, கடந்த ஜனவரி மாதமும் மீரா ஓடை குளத்தில் விழுந்து 6 வயது பிள்ளை ஒன்று உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

தென்கிழக்கு பல்கலை மோதல்:

# மாணவர்களை விடுதியிலிருந்து வெளியேற நிர்வாகம் உத்தரவு!

கல்முனை, ஜூலை 17

இரவு விடுதியில் தங்கி கல்வி கற்றுவரும் முதலாம் வருட பொறியியல் பீட மாணவர்கள் அனைவரும் மறு அறிவித்தல் வரை உடனடியாக விடுதிகளை விட்டு வெளியேறுமாறு நேற்று முன்தினம் நிர்வாகம் அறிவித்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் 5 மாணவர்கள் உட்பட 6 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் எம். ஐ. நௌபர் தெரிவித்துள்ளார்.

மேலும், சிரேஷ்ட மாணவர்களின் கல்வி செயல்பாடுகள் வழமை போன்று நடைபெற்று வருகின்றன என்றும் முதலாம் வருட பொறியியல் மாணவர் குழுக்களிடையேயே மோதல் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதையடுத்தே அவர்களை விடுதியிலிருந்து வெளியேறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், மாணவர்களின் மோதல் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக துணைவேந்தர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கிழக்கு மாகாணத்தில் தமிழரே முதலமைச்சர்

சமூக ஜனநாயக கட்சி

திருகோணமலை, ஜூலை 17

கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவரே முதலமைச்சராக வர வேண்டும். மாகாண சபைகள் தேர்தலில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் போட்டியிட வேண்டும் என்று தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் சின்னமோகன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கிழக்கு மாகாண சபையை இந்த முறை தமிழர் ஒருவர் முதலமைச்சராக வர வேண்டும் என்பதுடன் முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு தமிழ்க் கட்சிகள் முன் வர வேண்டும். கிழக்கு மாகாணத்தில் பல அபிவிருத்திகளை வேலை வாய்ப்புகளை நடைமுறைப்படுத்த தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் தேவை - என்றும் கூறினார். (ஐ)

# ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் கந்தளாய் பொலிஸில் முறைப்பாடு

திருகோணமலை, ஜூலை 17

திருகோணமலை மாவட்டத்தில் மணல் கடத்தல்காரர்களால் ஊடகவியலாளர் ஒருவருக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக கந்தளாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இந்த மிரட்டல் விடுக்கப்பட்டதுடன், மிரட்டலை விடுத்தவர்கள் தன்னை தாக்கவும் முயன்றனர் என்றும் ஊடகவியலாளர் எம். எச். யூசுப் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி, சேருநுவர பொலிஸ் பிரிவில் தீத்தாந்தட்டி பகுதியில் நடந்த சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 7 பேர் 5 டிராக்டர்களுடன் கைது செய்யப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பில் செய்தி வெளியிட்டமைக்காகவே தமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக ஊடகவியலாளர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நிர்வாணமாக வீதியில் நடமாடிய பெண்ணுக்கு ஒத்திவைத்த சிறை

பொத்துவில், ஜூலை 17

அரை நிர்வாணமாக வீதியில் நடந்து சென்ற பெண்ணுக்கு இரு வாரங்கள், ஒரு மாதம் ஒத்திவைத்த சிறைத் தண்டனை விதித்துள்ளது பொத்துவில் நீதிவான் நீதிமன்றம்.

26 வயதுடைய தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவருக்கே இவ்வாறு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தண்டனை விதிக்கப்பட்ட பெண் அறுகம் குடா சுற்றுலா தளத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து மற்றுமொரு ஹோட்டலுக்கு கடந்த திங்கட்கிழமை பிற்பகல் மேலாடை இன்றி நிர்வாணமாக நடந்து சென்றுள்ளார்.

இது தொடர்பில் பொத்துவில் பொலிஸ் மகளிர் பணியகத்துக்குக் கு கிடைத்த தகவலின் பேரில் அவர் கைது செய்யப்பட்டார்.

தனது காதலனுடன் ஏற்பட்ட முரண்பாட்டால் இவ்வாறு நடந்து கொண்டார் என்று விசாரணையின்போது பெண் குறிப்பிட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் பெண் பொத்துவில் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாரின் எச்சரிக்கையையும் நாம் பொருட்படுத்தவில்லை

## ட்ரம்புக்கு ரஷ்யா பதில்

மொஸ்கோ, ஜூலை 17

**“யாருடைய இறுதி எச்சரிக்கைகளையும் நாங்கள் பொருட்படுத்தவில்லை. அவசியம் என்று கருதினால் அமெரிக்காவுக்கு ஜனாதிபதி புடின் பதில் அளிப்பார்”, இவ்வாறு ரஷ்யா தெரிவித்துள்ளது.**

“உக்ரைன்மீதான போதை ரஷ்யா 50 நாட்களுக்குள் நிறுத்த வேண்டும். இல்லையேல் அந்த நாட்டின்மீது கடுமையான பொருளாதார தடைகள் விதிப்பேன்”, என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியின் இந்த எச்சரிக்கைக்கு பதிலளித்துள்ள ரஷ்ய செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், “எமது நாடு யாருடைய அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறிய கருத்துகள் மிகவும் தீவிரமானவை. குறிப்பாக, சில கருத்துகள் நமது ஜனாதிபதி புடினை தனிப்பட்ட முறையில் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. யாருடைய இறுதி எச்சரிக்கைகளையும் நாங்கள் பொருட்படுத்தவில்லை. வாஷிங்டனின் கருத்துகளை பகுப்பாய்வு செய்ய நாங்கள் நேரம் ஒதுக்குவோம். ஜனாதிபதி புடின் அவசியம் என்று கருதினால் நிச்சயமாக பதிலளிப்பார்” - என்றார்.

# மொஸ்கோவை தாக்க முடியுமா?

## ஜெலன்ஸ்கியிடம் ட்ரம்ப் கேள்வி



வாஷிங்டன், ஜூலை 17

“மொஸ்கோ, சென். பீற்றர்ஸ்பேர்க் நகரங்களை தாக்க முடியுமா”, என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியிடம் கேட்டார் என்று அமெரிக்க ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ரஷ்யா - உக்ரைன் போர் 3 ஆண்டுகளாக தொடர்கிறது. இதில், பல ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். அடுத்த 50 நாட்களுள் ரஷ்யா போரை நிறுத்த வேண்டும். இல்லையேல், பொருளாதார தடை விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஆனால், இந்த எச்சரிக்கைகளை பொருட்படுத்தவில்லை என்று ரஷ்யா பதிலளித்துள்ளது.

இந்த நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உரையாடியுள்ளார்.

அமெரிக்க ஊடகங்களின் தகவலின்படி, உக்ரைன் ஜனாதிபதியிடம் ட்ரம்ப், “மொஸ்கோவை தாக்க முடியுமா?, சென். பீற்றர்ஸ்பேர்க்கை தாக்க முடியுமா?”, என்று கேட்டுள்ளார்.

இதற்கு உக்ரைன் ஜனாதிபதி, “நிச்சயமாக. நீங்கள் எங்களுக்கு ஆயுதம் வழங்கினால் நாங்கள் அதைச் செய்வோம்” என்று பதிலளித்துள்ளார்.

முன்னதாக, உக்ரைனுக்கு வான் பாதுகாப்பு ஏவுகணைகள் வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்திருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.


# உலகின் அதிக வயதான மரதன் வீரர் விபத்தில் பலி

புதுடில்லி, ஜூலை 17

உலகின் மிகவும் வயதான மரதன் ஓட்டப்பந்தய வீரர் என்று அறியப்படும் பௌஜா சிங் விபத்தில் உயிரிழந்தார்.

114 வயதான பௌஜா சிங் இந்தியாவின் பஞ்சாபில் உள்ள தனது சொந்த கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை நடைப்பயிற்சில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை வாகனம் மோதி உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த அவர், ஜலந்தரில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார். அவரது மறைவை



எழுத்தாளர் குஷ்வந்த் சிங் உறுதிப்படுத்தியுள்ளார். பௌஜா சிங்கின் வாழ்க்கை வரலாற்றை “தி டர்பண்ட் டோர்னாடோ” என்ற பெயரில் குஷ்வந்த் சிங் நூலாக எழுதியுள்ளார். (ஐ)



# உக்ரைன் பிரதமர் பதவி விலகினார்!

## புதிய பிரதமராக யூலியா

கீவ், ஜூலை 17

உக்ரைன் பிரதமர் டெனிஸ் ஷமிஹால் நேற்று முன்தினம் தனது பதவியை இராஜிநாமா செய்தார்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி ஷமிஹாலுக்கு பதிலாக உப பிரதமர் யூலியா ஸ்வைரிடென்கோவை பிரதமராக பரிந்துரைத்தார். அத்துடன், இவரே பாதுகாப்பு அமைச்சையும் கவனித்துக் கொள்ளவுள்ளார்.

இந்த நிலையிலேயே டெனிஸ் ஷமிஹால் பிரதமர் பதவியிலிருந்து இராஜிநாமா செய்துள்ளார். இந்த வாரம் உக்ரைன் பாராளுமன்றம் ஸ்வைரிடென்கோவின் நியமனம் தொடர்பில் வாக்களிக்கவுள்ளது.

இதனிடையே, ரஷ்யா - உக்ரைன் போர் சுமார் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கிறது. பல ஆயிரம் பேர் உயிரிழந்தும் அவயவங்களை இழந்தும் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாகிஸ்தானில் கனமழை; மரணம் 116 ஆக உயர்ந்தது

கராச்சி, ஜூலை

பாகிஸ்தானில் அண்மை நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவு போன்ற பேரிடர்களில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 116ஆக அதிகரித்துள்ளது.

பஞ்சாப், ஹைபர் பக்துவா, சிந்து, பலுசிஸ்தான் மாகாணங்களிலேயே கனமழை பெய்து வருகிறது. இதனால், ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவால் முன்னர் 80 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில், இந்தப் பலி எண்ணிக்கை 116ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும், பேரிடர்களில் சிக்கிய 262 பேரை பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். கனமழையால் பலர் வீடுகளை இழந்து முகாம்களில் தங்கியுள்ளனர்.

இதனிடையே, பருவமழையின் தாக்கம் மேலும் அதிகரித்து வருகிறது. இதனால், மக்கள் அச்சமடைந்துள்ளனர். (ஐ)



# இந்திய விண்வெளி வீரர் சுக்லா உள்ளிட்டவர்கள் பூமி திரும்பினர்

நியூயோர்க், ஜூலை 17

சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொண்ட விண்வெளி வீரர்கள் நால்வர் டிராகன் விண்கலம் மூலம் பூமிக்கு திரும்பினர். அமெரிக்காவின் கலிபோர்னியா அருகே பசுபிக் கடலில் விண்கலம் பாதுகாப்பாக இறங்கியது.

இதில், இந்திய விண்வெளி வீரர் ஷுபன்ஷுசுக்லாவும் ஒருவர். கடந்த திங்கட்கிழமை மாலை 4.35 மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து டிராகன் விண்கலத்தில் பூமிக்கு புறப்பட்ட இவர்கள் 23 மணி நேரம் கழித்து நேற்று முன்தினம் மாலை பூமிக்கு திரும்பினர்.

டிராகன் விண்கலத்தின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் மற்றும் நாஸாவின் மீட்புக் குழுவினர் 4 விண்வெளி வீரர்களையும் விண்கலத்தில் இருந்து பத்திரமாக மீட்டனர். பூமி திரும்பிய 4 வீரர்களும் இரு வாரங்களுக்கு மருத்துவ பாதுகாப்பில் இருப்பர்.

முன்னதாக, அமெரிக்காவின் அக்ஸியம் ஸ்பேஸ், நாசா, இஸ்ரோ, ஐரோப்பிய விண்வெளி முகமை ஆகியவை இணைந்து கடந்த 25ஆம் திகதி சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு போல்கன் ஏவூர்தி மூலம் டிராகன் விண்கலத்தை அனுப்பின. இந்த விண்கலத்தில் இந்திய வீரர் ஷுபன்ஷு சுக்லா, அமெரிக்காவின் பெக்கி விட்சன், போலந்தின் ஸ்லாவோகி உஸ்னான்ஸ்கி, ஹங்கேரியின் திபோர் கபு ஆகியோர் 28 மணி நேரம் பயணம் செய்து கடந்த 26ஆம் திகதி சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தனர். அங்கு17 நாட்கள் அங்கு தங்கியிருந்து ஆய்வில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரிட்டன் புகலிடமளித்த ஆப்கானியர் விவரம் கசிவு

லண்டன், ஜூலை 17

இரகசிய திட்டம் ஒன்றின் கீழ் ஆயிரக்கணக்கான ஆப்கானிஸ்தான் நாட்டவர்கள் பிரித்தானியாவுக்கு சென்றனர். அவர்களின் பெயர் விவரங்களை பிரிட்டன் அதிகாரி ஒருவர் தவறுதலாக கசிய விட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

2022 பெப்ரவரியில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு பிரித்தானியாவுக்கு செல்ல விண்ணப்பித்த சுமார்19 ஆயிரம் பேரின் தனிப்பட்ட விபரங்கள் கசிந்துள்ளன.

அத்துடன் தலிபானின் ஆட்சிக்கு பின்னர் இதுவரை 4 ஆயிரத்து 500 ஆப்கானியர்கள் பிரித்தானியாவில் தஞ்சம் புகுந்தனர்.



அவர்களின் விவரமும் வெளிப்பட்டுள்ளது.

இவ்வாறு தரவு வெளிப்பட்டவர்களில் தலிபானின் இலக்குக்கு உள்ளாகின 600இற்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகள், முக்கியஸ்தர்களும் அடங்குவர்.

இந்தத் தரவு கசிந்தமை ஆப்கானிஸ்தானில் வசிக்கும் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் - குடும்பத்தவருக்கு ஆபத்தை ஏற்படுத்தும். சுமார் ஒரு இலட்சம் பேரின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று கூறப்படுகிறது. எனினும், பெயர் விவரங்களை மாத்திரம் வைத்து ஆபத்தை ஏற்படுத்த முடியாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிராஜ், டக்கெட்டுக்கு அபராதம் விதிப்பு!

லண்டன், ஜூலை 17

மைதானத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டமைக்காக இந்தியாவின் முகமது சிராஜ், பென் டக்கெட் ஆகியோருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டியின் 4ஆவது நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் பென் டக்கெட் விக்கெட்டை முகமது சிராஜ் கைப்பற்றினார். அப்போது, இதை ஆக்ரோஷமாக கொண்டாடிய முகமது சிராஜ், பென் டக்கெட் தோள் பட்டையை இடித்தார்.

இந்த விவகாரத்தில் முகமது சிராஜ்க்கு ஒரு தகுதி இழப்பு புள்ளியையும் போட்டியின் ஊதியத்தில் 15 சதவீதத்தையும் அபராதமாக விதித்துள்ளது ஐ. சி. சி.

இந்தப் போட்டியில் சிராஜ் 4 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார். முதல் இன்னிங்ஸில் ஜேமி ஸ்மித், பிரைடன் கார்ஸ் விக்கெட்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் பென் டக்கெட், ஒல்லி போப் விக்கெட்களையும் சிராஜ் வீழ்த்தினார். (ஐ)

# ரென்னிஸ் தரவரிசை பட்டியல் இகா, அனிசிமோவா முன்னேற்றம்


லண்டன், ஜூலை 17

சர்வதேச ரென்னிஸ் தரவரிசை பட்டியலில் இகா ஸ்வியாரெக், அனிசிமோவா முன்னேற்றம் கண்டுள்ளனர்.

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் அண்மையில் நிறைவடைந்தது. இதனையடுத்து சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் பெலாரசின் சபலென்கா முதலிடத்திலும், அமெரிக்காவின் கோகோ காப் இரண்டாவது இடத்திலும் மாற்றமின்றி நீடிக்கின்றனர். விம்பிள்டன் பட்டம் வென்ற இகா ஸ்வியாடெக் ஓர் இடம் முன்னேறி 3ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இந்நிலையில், விம்பிள்டன் இறுதி போட்டியில் தோல்வி அடைந்த அமெரிக்காவின் அமெண்டா அனிசிமோவா 5 இடங்கள் முன்னேறி சிறந்த தரநிலையாக 7ஆவது இடம் பிடித்துள்ளார். (ஐ)





## இங்கிலாந்துடனான தொடர்:

# இந்தியாவுக்கான வெற்றி வாய்ப்பு இன்னமும் உள்ளது

மும்பை, ஜூலை 17

"இந்திய அணியால் இப்போதும் இந்த தொடரை 3-2 என்ற கணக்கில் வெல்ல முடியும்", என்று முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.


இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில், நடைபெற்ற முதல் 3 போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதையடுத்து, இந்த இரு அணிகள் இடையிலான 4ஆவது போட்டி மன்செஸ்டரில் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இந்நிலையில், இந்திய அணியால் இப்போதும் இந்த தொடரை 3-2 என்ற கணக்கில் வெல்ல முடியும் என்று முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய அவர் கூறுகையில்,

"இது ஒரு நல்ல அணி. இந்தியா வலுவான பந்துவீச்சு வரிசையைக் கொண்டுள்ளது. மன்செஸ்டரில் பந்து வீச்சாளர்களுக்கு நிச்சயமாக அதிக உதவி கிடைக்கும். இது எங்கள் பந்துவீச்சு தாக்குதலை மிகவும் சோதிக்கும். மன்செஸ்டர் துடுப்பாட்ட வீரர்களுக்கு சிறப்பாக இருக்கும். ஏனெனில், அவர்கள் பந்து துடுப்புக்கு வருவதை விரும்புகிறார்கள். ஒட்டுமொத்தமாக பந்து நன்றாக வரும் ஓர் ஆடுகளமாக இது இருக்கும்.

எனவே, மன்செஸ்டரில், இந்தியா தொடரை சமன் செய்ய மிக நல்ல வாய்ப்பு உள்ளது என்று நான் நினைக்கிறேன். இந்தியாவுக்கு கொஞ்சம் அதிர்ஷ்டம் தேவை. இங்கிலாந்துக்கு இங்கேயும் (லோர்ட்ஸ்) லீட்ஸிலும் கொஞ்சம் அதிர்ஷ்டம் இருந்தது. இந்திய அணி மன்செஸ்டர் மற்றும் ஒவலில் (5ஆவது போட்டி) கொஞ்சம் அதிர்ஷ்டம் பெற்றால் தொடரை 3-2 என வெல்ல முடியும்" என்று கூறினார். (ஐ)



## விம்பிள்டன் ரென்னிஸ்

# முதன்முதலாக சம்பியன் வென்றார் ஜன்னிக் சின்னர்

லண்டன், ஜூலை 17

இத்தாலியின் ஜன்னிக் சின்னர் முதன்முறையாக விம்பிள்டன் ரென்னிஸ் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி லண்டனில் திங்கட்கிழமை நடைபெற்றது. இதில், உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதியாட்டத்தில், உலகின் முதல்நிலை வீரரான இத்தாலியின் ஜன்னிக் சின்னர், இரண்டாம் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்காரஸ் உடன் மோதினார்.

தொடக்கத்தில் அதிரடியாக ஆடிய அல்காரஸ் முதல் செற்றை 6-4 என கைப்பற்றினார். இதையடுத்து சுதாரித்துக் கொண்டு சிறப்பாக ஆடிய ஜன்னிக் சின்னர் அடுத்த 3 செற்களை 6-4, 6-4, 6-4 என்ற செற் கணக்கில் வென்று முதல் முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.





# புத்தூர் வீனஸின் உதைபந்து; எவரெட்ஸ்ட், கலைமதி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 17

புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட போட்டியில் எவரெஸ்ட், நவிண்டில் கலைமதி அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சமர் ஆரம்பமாகியுள்ளது.

புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தத் தொடரில் யாழ். மாவட்டத்தின் 48 முன்னணி விளையாட்டுக்கழகங்கள் பங்கேற்கின்றன.

முதல்நாள் ஆட்டத்தில் "பி" பிரிவில் கொலின்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் மோதியது. விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களை போட்டு சமநிலையில் இருந்தன. எனினும், இரண்டாவது பாதி ஆட்டத்தில் மேலும், 4 கோல்களை போட்டு ஆட்டத்தின் 5 - 2 என்ற கோல் கணக்கில் எவரெஸ்ட் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

தொடர்ந்து, நடைபெற்ற "ஏ" பிரிவுக்கான போட்டியில் சென். றொக்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டு கழகம் மோதியது. விறுவிறுப்பான ஆட்ட முடிவில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் 2 - 1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ஐ-5)

# இந்தியாவுடனான 4ஆவது போட்டி இங்கிலாந்து அணி அறிவிப்பு!

லண்டன், ஜூலை 17


இந்திய அணிக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து - இந்திய அணிகள் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றன. இங்கிலாந்தில் நடக்கும் இந்தத் தொடரில் 3 போட்டிகள் நிறைவடைந்த நிலையில் 2 -1 என்ற கணக்கில் இங்கிலாந்து முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான 4ஆவது போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி மன்செஸ்டரில் ஆரம்பமாகிறது.

இந்நிலையில் இந்த போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக இந்த தொடரின் எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகிய சொஹைப் பஷீருக்கு மாற்று வீரராக லியொம் டாசன் இங்கிலாந்து அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அணி விவரதம் - பென் ஸ்ரோக்ஸ் (கப்டன்), ஜோப்ரா ஆர்ச்சர், கஸ் அட்கின்சன், ஜேக்கப் பெத்தேல், ஹாரி




புரூக், பிரைடன் கார்ஸ், ஜாக் கிராவ்லி, லியொம் டாசன், பென் டக்கெட், ஒல்லி போப், ஜோ ரூட், ஜேமி ஸ்மித், ஜோஷ் டாங், கிறிஸ் வேர்க்ஸ். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா....

பலஸ்தீனம் உள்ளிட்ட நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

அத்துடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நியமித்த சுயாதீன நிபுணர்கள் என்ற அடிப்படையில் விசேட அறிக்கையாளர்கள் அச்சுறுத்தல்கள் - மிரட்டல்கள் - பழிவாங்கல்கள் இன்றி, தங்கள் பணிகளை முன்னெடுப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும் - என்றும் அவை கோரியுள்ளன. (ஐ)

## கறுப்பு ஜூலை...

நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தவை வருமாறு,

"இதுவரை காலமும் இலங்கையின் கொடூர சிறைக் கூடங்களுக்குள் நயவஞ்சகமாக படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கான நீதி நியாயத்தை கோருகின்ற பொது நினைவேந்தலும் - 30 ஆண்டுகள் கடந்தும் விடுதலையின்றி சிறைகளுக்குள் வாடிக் கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய நூதன கவனவீர்ப்புப் போராட்டமும் மக்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

"இவ்வாறான அறப் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் பட்சத்திலேயே, சமூகத்தின் பெயரில் சிறை வாடும் எமது உறவுகளான "தமிழ் அரசியல் கைதிகளுக்கு" நீதி, நியாயமும் - விடுதலையும் கிடைக்கப்பெறும் எனும் நிலைமை ஏற்பட்டுள்ளது. மனிதநேயம் கொண்ட நல்லுள்ளங்கள் ஒருங்கிணைந்து முன்னெடுப்புகளை மேலும் வலுப்படுத்தக்கூடிய வகையிலான உதவிகளை "விடுதலைக்கான திறவுகோல்களை கனதியாக்குவோம்" என்கின்ற உண்டியல் திட்டத்தின் ஊடாக மனமுவந்து நல்கவேண்டுமென அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

"அத்துடன், இந்தப் பொதுவெளி கவனவீர்ப்பு போராட்டத்தில் இனம், மதம், மொழி கடந்து வயது, பால் வேறுபாடின்றி, கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைய வேண்டும். இதன்மூலமே இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் ஒரு திரட்சிமிகு அழுத்தத்தைக் கொடுத்து, அன்புக்குரிய எமது சிறை உறவுகளை உயிர்ப்புடன் விடுவிக்க முடியும்." (ஐ)

## கழிவகற்றும்...

போராட்டத்தில் ஈடுபட்டனர்.

செங்கலடி பிரதேச சபையின் தவிசாளர் மு. முரளிதரன், வாழைச் சேனை பிரதேச சபையின் தவிசாளர் சு. சுதாகரன் ஆகியோரே நேற்றைய தினம் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்த பின்னர் கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவுப்படி அவரிடம் ஒப்படைக்கப்பட்டன. தேர்தலை தொடர்ந்து உள்ளூராட்சி சபைகள் மீள இயங்க ஆரம்பித்துள்ளன. ஆனால், அந்த வாகனங்கள் மீளவும் குறித்த சபைகளிடம் ஒப்படைக்கப்படவில்லை. இந்த நிலையில், வாகனம் இன்மையால் மக்களுக்கான சேவையை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர் கொள்வதாக குறித்த தவிசாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையிலேயே நேற்றைய தினம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்கு கழிவகற்றும் உழவியந்திரத்தில் தாம் சென்றனர் என்றும் அவர்கள் கூறினர்.

இதேநேரம், இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்த மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் அமைச்சருமான சுனில் ஹந்துன்னெத்தி, "நாங்கள் ஒரு போதும் பிரதேச சபைகளின் தவிசாளர்களின் வாகனங்களை பெறவில்லை. இவர்கள் ஊடகங்களுக்குப் படம் காட்டுவதற்காக உழவு இயந்திரத்தில் வந்துள்ளனர். இவர்கள் கழிவு அகற்றும் வாகனத்தை அந்த வேலைக்கு செல்ல விடாமல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர்" - என்றார். (ஐ)

## ரயில்...

ஞானசர்மா (வயது 55) என்பவரே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் மேலும் அறிய வருபவையாவன,

உயிரிழந்த நபர், மூடப்பட்டிருந்த ரயில் கடவையை சைக்கிளில் கடக்க முயன்றார். அப்போது, ரயில் அவர் பயணித்த சைக்கிளின் பின்புறத்தில் மோதியது. இதில் படுகாயமடைந்த அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

அவரின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-3-5)

## சூரிய...

நேற்றைய தினம் சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பின் ஆசிய, பசுபிக் பிராந்திய குழுவின் ஏழாவது மாநாடு கொழும்பில் பிரதமர் தலைமையில் ஆரம்பமானது. இதன்போதே, "பிராந்திய சூரிய சக்தி ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்கும், நிலையான அபிவிருத்தி மூலம் சக்தி பாதுகாப்பை அடைவதற்கும் இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது - என்று பிரதமர் கூறினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, "சூரிய சக்தி பயன்பாட்டை விரிவுபடுத்தும் அரசாங்கத்தின் "சூரிய சக்திக்கான போராட்டம்" எனும் திட்டம் மற்றும் 2030ஆம் ஆண்டுக்குள் 70 சதவீதம் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி இலக்கை அடையும் நோக்கத்துடன் அரசாங்கம் செயல்பட்டு வருகிறது" - என்றார்.

இந்த மாநாட்டில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஆஷிஷ் கன்னா உள்ளிட்ட ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் பிரதிநிதிகள் மற்றும் 124 நாடுகளின் உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## அரசின்...

தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் செயல்படுத்தப்பட்ட, செவன மாதிரி கிராம வீட்டுத்திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றிருக்கின்றன என்று தேசிய வீடமைப்பு அதிகாரசபை அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், இந்த முறைகேடு குறித்து அமைச்சு மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று முன்தினம் குறிப்பிட்டிருந்தார். இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "நான் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் துரித வீடமைப்பு அபிவிருத்தி, மத தலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன என்பதை குறிப்பிட வேண்டும். சட்டத்தின் பிரகாரமே நான் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டேன்.

நாட்டுக்கான அபிவிருத்தி பணிகளை செய்ததையும் ஒரு குற்றமாக கருதும் தரப்பினர் இந்த நாட்டில் உள்ளார்கள். அரசாங்கத்திலும் உள்ளார்கள். நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலனுக்காகவே நான் செயல்பட்டேன்.

கடந்த கால அரசாங்கங்களின் அனைத்து செயல்பாடுகளும் முறையற்றன என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு அரசாங்கம் செயல்படுகிறது. நாட்டு மக்களின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கும் சகல திட்டங்களுக்கும் எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

நாட்டு மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு இந்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரையில் எடுக்கவில்லை. கடன் பெறுவதை மாத்திரம் பிரதான கொள்கையாகக் கொண்டு அது செயல்படுகிறது - என்றார். (ஐ)

## எக்னெலிகொட வழக்கில் சாட்சியாக ஷானி

கொழும்பு, ஜூலை 17

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பான வழக்கில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சி. ஐ. டி.) தற்போதைய பணிப்பாளர் ஷானி அபேசேகர சாட்சியாளராகப் பெயரிடப்பட்டுள்ளார் என்று கொழும்பு ட்ரயல்-அட்-பாருக்கு சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

கிரிதலே இராணுவ முகாமின் முன்னாள் கட்டளை அதிகாரி லெப். கேணல் ஷம்மி குமார ரத்னா, இராணுவ புலனாய்வு பிரிவின் 9 உறுப்பினர்கள் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

## நடந்து....

தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"2009இன் பின் தாயகத்திலும் உலக பரப்பிலும் உள்ள தமிழ் பேசும் மக்களின் மனதில் எழுந்து நின்ற வினா, எமது தேசியத் தலைவரின் இருப்புத் தொடர்பானது. இதற்கு, 23 ஜூன் 2018ஆம் நாளில் வெளிவந்த புதுவிதி இதழில் "சத்தியசோதனை" என்ற பெயரில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன். அவர் எமது மனங்களில் மட்டுமே வாழ்கிறார் என்பதை வலியுறுத்தியிருந்தேன்.

பொதுவாக தாயகத்தில், குறிப்பாக முள்ளிவாய்க்கால் வரை பயணித்த மக்கள் களநிலைமையை சரியாகவே புரிந்து கொண்டவர்கள் என்ற வகையில் இனி எக்காலத்திலும் எங்கும் எம் கண்ணில் அவர் தோன்றமாட்டார் என்ற கசப்பான உண்மையை புரிந்துகொண்டனர். கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட காணொலிகளை மட்டுமே பார்த்து, இவ்வாறான உயரிய தலைவனின் காலத்தில் வாழ்ந்தோம் - பங்களித்தோம் என்ற உணர்வைப் பெற்றனர்.

"தாயகத்தில் தலைவரின் புதல்வி துவாரகாவின் வித்துடலுக்கு மண்தூவி வீரவணக்கம் செய்தவர்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அப்படியிருக்கையில் துவாரகாவின் பெயராலும் மோசடி செய்யும் ஈனப் பிறவிகள் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எமது புனிதமான விடுதலை இயக்கத்தின் தலைவரை தமிழினம் இழந்துவிட்டது என்ற செய்தியை அனைத்துலகப் பொறுப்பாளரென ஏற்கனவே தலைவர் உத்தியோகபூர்வமாக நியமித்த கே. பி. மற்றும் அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ராம், பிராந்திய அரசியல் துறைப்பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோர் உலகுக்குத் தெரியப்படுத்தினர். அந்த நாள் 17 மே 2009 எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தனர். இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளும் திராணி எப்போதும் போராட்டத்துக்கும் தேசியத் தலைவருக்கும் விசுவாசமாக இருப்போம் என அடிக்கடி சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்ட அனைவருக்கும் இருக்கவேண்டும்.

"உத்தியோகபூர்வமாகத் தலைவரால் நியமிக்கப்பட்ட இந்த மூவரும் விடுத்த அறிவித்தலை இனி எவரும் உதாசீனம் செய்ய முனைய மாட்டார்கள் என நான் நம்புகிறேன். ஏற்கனவே நடந்து முடிந்ததே வரலாறு. இதில் தணிக்கைக்கோ சமரசத்துக்கோ இடமில்லை. பெரும்பான்மையினரின் முடிவு என்று தீர்மானிப்பதற்கு இது தேர்தல் அரசியலல்ல. நாம் எடுக்கும் முடிவுகள் இவ்வளவு காலமும் வாழ்ந்த வாழ்க்கையின் அர்த்தத்தைப் பிரதிபலிக்கவேண்டும். வேறு எந்த சக்திகளின் முடிவுகளையும் அமுலாக்கும் விதமாக வரலாற்றை மாற்றியமைக்க முயலக் கூடாது என எமது மாவீரர் குடும்பங்களின் சார்பில் வேண்டிக்கொள்கிறேன். தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் எனது கால டிகளும், நான் பயணித்த துவிச்சக் கரவண்டிகளின் தடங்களும் பதிந்துள் ளன என்ற உரிமையில் இந்த வேண்டு கோளை விடுக்கிறேன். தலைவரை மனதில் பதியவைத்து சிந்தித்தால் எல்லாமே சரியாக நடக்கும் என நம்புகிறேன் - என்றுள்ளது. (ஐ)

## நாய்களுக்கு...

வரவேற்ற உறுப்பினர்கள், நாய்கள் காப்பகத்தை இடையில் கைவிடாமல் தொடர்ச் சியாக முன்னெடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியதுடன், அதனை ஏகமனதாக நிறைவேற்றினர். (ஐ)

## சபை...

நடைபெற்றது.

மாநகர சபை உறுப்பினர்களிடையே விவாதம் நடைபெற்ற நிலையில், சபை அமர்வில் பங்கேற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் இரத்தினம் சதீஸ் வெளியே சென்று பார்வையாளர் பகுதியில் இருந்து மாநகர சபை அமர்வை முகநூல் ஊடாக நேரலையில் ஒளிபரப்பினார்.

இதனை அவதானித்த ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் மாநகர சபை உறுப்பினர் ப. தர்சானந், குறித்த விடயம் தொடர்பில் மாநகர முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

சபை ஒழுங்கு விதிகளுக்கு மாறாக உறுப்பினர் செயல்பட்டமையால் சபை அமர்வில் பங்கேற்க ஒரு மாதம் தடைவிதிப்பது சம்பந்தமாக முதல்வர், சபை உறுப்பினர்களின் ஆலோசனையை கேட்டார்.

இதன்போது எழுந்த ஈ. பி. டி. பி. உறுப்பினர் இளங்கோவன், "அவ்வாறு செய்த உறுப்பினர் புதியவர் என்பதால் மன்னிப்பு வழங்குங்கள்", என்று கோரினார்.

இதையடுத்து, ஏனைய கட்சிகளை சேர்ந்த சிலர், குறித்த உறுப்பினரிடம் தன்னிலை விளக்கம் கோர வலியுறுத்தினர்.

இதையடுத்து, சபா மண்டபத்துக்கு சென்ற உறுப்பினர், தான் ஓர் ஊடகவியலாளர் என்றும் அதனாலேயே நேரலை செய்தேன் எனவும் கூறினார்.

ஊடகவியலாளர்கள் இருக்கும்போது உறுப்பினர் அவ்வாறு செயல்பட்டமை தொடர்பாக கடும் எச்சரிக்கை விடுத்த மாநகர முதல்வர், இனிமேல் இவ்வாறு சபை அமர்வில் நடந்தால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் - என்று எச்சரித்தார்.

இதைத் தொடர்ந்து சபை அமர்வு வழமை போன்று நடைபெற்றது. (ஐ)

## மூதூர்...

அவர்களை நினைவேந்தனர்.

அத்துடன், படுகொலை இடம்பெற்று 39 ஆண்டுகள் கடந்தும் தமக்கும் இறந்த தமது உறவுகளுக்கும் இன்னமும் நீதி கிடைக்கவில்லை. இந்த ஆட்சியிலாவது எமக்கு நீதி பெற்றுத் தரப்பட வேண்டும் - என்று அஞ்சலி செலுத்திய உறவினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

திருகோணமலை - மூதூர் - மல்லிகைத்தீவுக்கு அண்மையாக அமைந்துள்ள பெரியவெளி பாடசாலையில் 1986ஆம் ஆண்டு அயல் கிராமங்களை சேர்ந்த மக்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்து தஞ்சமடைந்திருந்தனர்.

ஜூலை 16ஆம் திகதி 3 மணிக்கு ஆயுததாரிகளால் அகதி முகாம் சுற்றிவளைக்கப்பட்டது. இதன்பின்னர், அங்கிருந்தவர்கள் துப்பாக்கியால் சுட்டும் வெட்டியும் எரித்தும் கொல்லப்பட்டனர். பெண்கள் இருவர் உட்பட 44 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

தொடர்ந்து, கிராமத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகள் அங்கிருந்த 25 ஆண்கள், பெண்கள் இருவரை கொன்றனர். அத்துடன், 17 ஆண்களை பிடித்துச் சென்று, அவர்களை முழந்தாளிட செய்து குடும்பத்தினர் கண்முன்னேயே சுட்டுக் கொன்றனர். பின்னர், இவர்களின் சடலங்கள் கட்டைபறிச்சான் இராணுவ முகாமில் வைத்து பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

மேலும், 11 பேர் பிடித்துச் செல்லப்பட்டதுடன், 8 பேர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஏனைய மூவரும் சிறையில் அடைக்கப்பட்டு சில வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இன்னும் நிறுவப்படாத 50 உள்ளூராட்சி சபைகள்



கொழும்பு,ஜூலை 17

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றிருந்தாலும், பல்வேறு காரணங்களால் சுமார் 50 உள்ளூராட்சி நிறுவனங் களின் அதிகாரங்கள் இன்னும் நிறுவப்படவில்லை என பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

இதன் காரணமாக, அந்த சபைகள் இன்னும் பொது சேவை நடவடிக்கைகளைத் தொடங்க முடியாத நிலையில் உள்ளன.

சில உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்படாதமை, மேலும் சில இடங்களில் நீதிமன்ற உத்தரவுகள் இருந்ததாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

சபைக் கூட்டங்களில் மொத்த உறுப்பினர்களில் குறைந்தது 50 வீதம் பேர் பங்கேற்க வேண்டும் என்ற விதிமுறை உள்ள நிலையில், சில உறுப்பினர்கள் வேண்டுமென்றே பங்கேற்காமல் இருந்ததால் நிர்வாகம் நிறுவப்படவில்லை என அவர் கூறினார்.

வனாதவில்லு பிரதேச சபையில், பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான பிரச்னை காரணமாக இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நிர்வாகம் நிறுவப்படாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# செம்மணியில் புத்தகப்பையோடு மீட்கப்பட்ட எலும்புக்கூடு 4-5 வயதுச் சிறுமியினுடையது!

## நீதிமன்றில் சட்ட மருத்துவ அதிகாரி அறிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 17

**யாழ்ப்பாணம்-செம்மணிப் புதைகுழியில் நீல நிறப் புத்தகப்பை (யுனிசெவ் நிறுவனத்தின் புத்தகப்பை), சிறுவர்கள் விளையாடும் பொம்மை போன்றவற்றோடு அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதி 4-5 வயதுடைய சிறுமியினுடையது என்று சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையாவால் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.**

செம்மணிப் புதைகுழியில் இருந்து நீல நிறப் புத்தகப்பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை என்பவற்றோடு அகழ்ந்தெடுக்கப்பட்ட சிறுவரின் என்புத் தொகுதி எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதி தொடர்பான மனித என்பு ஆய்வு அறிக்கையை நேற்று முன் தினத்துக்கு முன்னர் மன்றில் சமர்ப்பிக்குமாறு சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையாவுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா கடந்த 10ஆம் திகதி கட்டளை ஒன்றினை வழங்கியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அந்த என்புத் தொகுதி தொடர்பான அறிக்கை மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

நீல நிறப் புத்தகப்பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை போன்ற வற்றோடு அடையாளம் காணப்பட்ட எஸ்-25 என அடையாளமிடப்பட்ட என்புத் தொகுதி சிறுமியின் என்புத் தொகுதி எனவும், உத்தேசமாக 4-5 வயதுடையதாக இருக்கும் எனவும் சட்ட மருத்துவ அதிகாரி மன்றில் தனது அறிக்கையை வெளியிட்டார்.

மேலும் எஸ்-48, எஸ்-56 என அடையாளமிடப்பட்ட சிறுவர்களினுடைய என்புத் தொகுதிகள் எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதிகள், புத்தகப்பையோடு அடையாளம் காணப்பட்ட சிறுமியினுடைய என்புத் தொகுதியோடு உடைகள் மற்றும் என்பியல் சம்பந்தமாக ஒருமித்த தன்மைகள் இருப்பதாகவும் மன்றுக்கு சட்ட மருத்துவ அதிகாரியால் சுட்டிக் காட்டப்பட்டது.

புத்தகப்பையோடு அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டது போன்ற என்பு ஆய்வை சிறுவர்களினுடையது என நம்பப்படும் குறித்த இரண்டு என்புத் தொகுதிகள் மீதும் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மன்றால் அறிவுறுத்தப்பட்டது. (அ)

# வட மாகாணத்தை மீளக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு கனடா முழு ஆதரவு

## அந்நாட்டுத் தூதுவர் உறுதிமொழி

யாழ்ப்பாணம், ஜூலை 17

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு கனடாவும் தம்மால் முடிந்த ஒத்துழைப்பை வழங்கும் என அந்நாட்டு தூதுவர் உறுதியளித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கான கனடா தூதுவருக்கும், தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ.ரஜீவன், ஸ்ரீபவானந்தராஜா, இளங்குமரன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம், காணி பிரச்னை, வடக்கை இலக்காகக் கொண்டு அமையவுள்ள முதலீட்டு வலயங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அரசியல், பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு தேசிய மக்கள் சக்தியால் நிச்சயம் தீர்வுகள் முன்வைக்கப்படும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும், தமிழ் மக்களும் முழு அளவில் அரசாங்கம்மீது நம்பிக்கை வைத்துள்ளனர் எனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தூதுவரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.



அத்துடன், வடக்கு, கிழக்கை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு கனடாவும் உதவி நல்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். இதற்கு கனடா தம்மால் முடிந்த ஒத்துழைப்புகளை வழங்கும் என தூதுவர் பதிலளித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தை போல இல்லாமல் இந்த அரசாங்க ஆட்சியாளர்கள் மிகவும் வித்தியாசமானவர்கள், மக்களுக்கு சேவை செய்யக்கூடியவர்களே தற்போது இருக்கின்றார்கள் எனவும், தற்போதைய ஜனாதிபதியும் சர்வ அதிகாரம் கொண்டவராக இல்லாமல் மக்களின் தலைவனாக செயற்படுகின்றார் எனவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் முதலீடுகள் செய்வதற்கான சூழல் பற்றியும் பேசப்பட்டுள்ளது.

வடக்கில் பெண் தலைமைத்துவ குடும்பங்களை இலக்கு வைத்து கனடாவால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டம் வெற்றியளிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்பு வழங்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள், தூதுவரிடம் எடுத்துரைத்துள்ளனர்.

இலங்கைக்கான கனடா தூதுவர் தமது சேவைக்காலம் முடிவடைந்து இம்மாதத்துடன் தாயகம் திருப்பவுள்ளார். அவர் ஆற்றிய சேவைகளுக்கு தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள் நன்றியும், பாராட்டுகளையும் தெரிவித்தனர். (அ)

# அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 76 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஜூலை 17

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒதுக்கப்பட்ட 76 பில்லியன் ரூபா நிதியை எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் பயன்படுத்த வேண்டுமென பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி அமைப்புகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கடந்த பாதீட்டில் இருந்து 23 பில்லியன் ரூபாவும் மாகாண சபைகளின் கீழ் அபிவிருத்திப் பணிகளுக்காக 53 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் ருவான் செனரத் தெரிவித்தார்.

இந்த நிதி இந்த ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முன்பு அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் சில உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிறுவுவதில் ஏற்படும் தாமதங்கள் அபிவிருத்திப் பணிகளில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதுபோன்ற தாமதங்கள் தொடர்ந்தால், ஒதுக்கப்பட்ட நிதியை திறைசேரிக்குத் திருப்பி அனுப்ப வேண்டியிருக்கும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.(அ)

# மன்னார் மக்களின் கோரிக்கைகளை அரசு உடனே நிறைவேற்றவேண்டும்!

மன்னார், ஜூலை 17

மன்னாரில் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு முன்னர், அரசாங்கம் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும் என மன்னார் பிரஜைகள் குழு வலியுறுத்தியுள்ளது.

மக்கள் தமது வளங்களையும், உரிமைகளையும் பாதுகாப்பதற்கு பாரிய போராட்டத்தை முன்னெடுப்பதற்கு முன்னர், மக்கள் கேட்கின்ற அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் விடயத்தில் அரசு தலையிடாவிட்டால் அரசுக்கு எதிராக மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுக்கவேண்டிய நிலை உருவாகும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மக்காஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org